நீலாம்பிகை அம்மையாரின் வரலாற்றுச் சுருக்கம்.

ஆசிரியர் :
வேதாசலம் பிள்ளை

PRINTED AT THE SRI BHARATHI, PRESS, CHOOLAI, MADRAS.

1946

நீலாம்பிகை அம்மையாரின் வரலாற்றுச் சுருக்கம்

தோற்றம்

இவ் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டின் தனிப்பெரும் தமிழ்ப்புலவராக விளங்கும் பல்லாவரம் பொதுநிலைக் கழகத்துப் பேராசிரியர் மறைமலையடிகள் என்பாருக்கும், அவர் மனைவியார் சவுந்தரவல்லி யம்மையாருக்கும் நீலாம்பிகையார் தவப்புதல்வியாராக 6 - 8 - 1903-ல் நாகபட்டினத்தில் பிறந்தார். அப்போது, வேதாசலம் பிள்ளை என்ற பெயரையுடைய அடிகளார் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். ஆதலினால், நீலாம்பிகையார் தம் குழவிப் பருவம் சென்னையிற் கழிந்தது. அக் காலத்தில் தமிழ்ப்பெரும்புலவராய்த் திகழ்ந்திருந்த அரசன்சண்முகனார், பாண்டித்துரைத்தேவர் ஆகியோர்களின் மடித்தலத்தில் தவழும் பேறுபெற்றபடியினால்தான் நீலா சிறந்த அறிவாளியாக இருக்கின்றாள் என்று அம்மையாரை அடிகள் சிறப்பித்துக் கூறுவது வழக்கம்.

சிறு பருவம்

1911-ம் ஆண்டில், அடிகள் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தாம் பார்த்துவந்த தமிழாசிரியர் வேலையை விடுத்துத் தம் குடும்பத்தாருடன் சென்னைக்குத் தெற்கே 13-வது கல்லில் உள்ள பல்லாவரத்திற் குடியேறினர்; கல்லாடை புனைந்து துறவியானார். அப்போதவர்க்குச் சிந்தாமணி, நீலாம்பிகை, திருஞானசம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி, திரிபுரசுந்தரி என்னும் பெயருடைய மக்கள் எழுவர் இருந்தனர். சுவாமிகள் பல்லாவரத்தில் குடியேறியபோது நீலாம்பிகையாருக்கு ஆண்டு எட்டு. சென்னையிலும் பல்லாவரத்திலுந் தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரையில் பயின்றார். அத்துடன் அவர் பள்ளிக்கூடப் பயிற்சி முடிவாயிற்று. அம்மையாரின் அறிவாற்றல்களையும், நற்குண நற்செயல்களையுங் கண்ட சுவாமிகள் மனமிக மகிழ்ந்து தம் புதல்வியாரைத் தம்போல் சிறந்த நல்லிசைப்

புலவராக்க விரும்பி, அவர்க்கு நன்னூல், நளவெண்பா, ஆறுமுக நாவலரின் பெரியபுராண வசனம் முதலிய நூல்களைக் கற்பித்தார். அத்துடன் சுவாமிகள் தம் மகளுக்குச் சொற்பொழிவு நிகழ்த்தும் அரிய திறத்தையும் அளிக்க விரும்பி, 'பெற்றோர் கடமை' என்னுங் கட்டுரையை எழுதிக் கொடுத்தார். அம்மையார், அதனை நெட்டுருச் செய்து, சென்னை, இராயப்பேட்டை குகானந்த நிலையத்துப் பால சுப்பிரமணிய பக்தசன சபையில் ஆண்டு விழாவின் பெருங் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். பதின்மூன்றே ஆண்டுடைய அம்மையாரின் சொற்பொழிவின் திறத்தை அவையோர் பெரு வியப்புடன் மகிழ்ந்து பாராட்டிப் பேசினர். அதனையடுத்த இரண்டாண்டுகளிலும் இவ்வாறே மிக அழகாக ஆண்டுவிழாக்களில் பேசிப் பெருமை பெற்றார். சுவாமிகளும் மேன்மேலும் தம் மகளாருக்குத் தமிழ்ச்செல்வத்தை யளிக்க ஆர்வமுற்றுத் தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை, நைடதம், வில்லிபுத்தூராழ்வார் பாரதம், புறநானூறு முதலிய நூல்களையும் பாடஞ்சொல்லி வைத்தனர்.

கன்னிப் பருவம்

அம்மையார், இவ்வாறு, தமிழ்ப்புலமை பெற்று வருவதுடன் தம் வீட்டு முறைப்படி தேவார திருவாசகங்கள் ஓதல், சிவவழிபாடாற்றல், அடியார் தொண்டு, சமையல் வேலை முதலியவற்றிலும் நன்கு பயிற்சியடைந்தார். இன்சொல்லும் ஈரநெஞ்சும் இவர்க்கு இயல்பா யமைந்த குணங்கள். அதனால், பெற்றோர் உற்றோரிடத்துப் பேரன்புடையவராய் மிளிர்ந்தார். இவர்தம் அருமைத் தாயாரான சவுந்தரவல்லியம்மையார், அம்மையாரின் தமிழ்ப் பயிற்சிக்குத் தந்தையினும் உதவுவோராய் நின்று வீட்டுவேலைகள் செய்யவிடாது கல்வியிற் கருத்துச் செலுத்துமாறு தம் மகளைத் தூண்டுவார்; வற்புறுத்திக்கொண்டே இருப்பார்.

தனித்தமி ழியக்கங் காணல்

பல்லாவரத்தில் குடியேறிய சில ஆண்டுகட்குப் பின் அவ்வூரிலேயே சுவாமிகள் பொதுநிலைக்கழக மாளிகையை அமைத்தனர். அம்மாளிகையைச் சூழச் சிறுதோட்டமும் மதிலும் உண்டு. காலை மாலை நேரங்களில் அத்தோட்டத்தில் சுவாமிகள் உலாவுவார்கள். ஒருநாள் மாலைப்போதில் சுவாமிகள் அவ்விடத்தில் தம் மகளொடு உலாவும்போது, இராமலிங்க சுவாமிகள் பாடிய

"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்

கற்ற நெஞ்சங் கலைமறந் தாலும்
கண்கள்நின் றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்குமென்
நமச்சி வாயத்தை நான்மற வேனே !"

என்ற பாடலைப் பாடினார்கள்.

"நீலா! இந்தப் பாடலிலுள்ள 'தேகம்' என்ற வடசொல்லிற்கு விடையாக 'யாக்கை' எனும் தமிழ்ச்சொல் ஆளப்பட்டிருந்தால் இப்பாடலின் சொல்லோசை மேலும் இனிமையாக இருக்குமன்றோ? வடசொற்களும் ஏனைய அயன்மொழிச் சொற்களும் தமிழிற் கலப்பதால், தமிழ் மொழியின் இனிமை குறைவுபடுவதுடன் தமிழ்ச்சொற்கள் பலவும் நாளடைவில் மறைய அயன்மொழிச் சொற்கள் ஏராளமாகத் தமிழில் நிலைபெற்று விடுகின்றன. இதனால், காலம் செல்லச்செல்லத் தமிழ்ச்சொற்கள் சிறுகச் சிறுக மறைந் தழிகின்றன. இவ்வாறே நிகழ்ந்துகொண்டிருந்தால் தமிழ் மொழியும் இறந்துபோன மொழிகளில் ஒன்றாய்விடுமன்றோ?" என்றனர். கேட்ட அம்மையார், "அங்ஙனமானால், இனி, நாம் தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டுமென்று உணர்ச்சி ததும்பக் கூறினார். அன்றுமுதல் அம்மையார் பேசும்போதும் எழுதும்போதும் தூய தனித்தமிழ்ச் சொற்களையே மிகவும் விழிப்புடன் கையாண்டனர். தனித் தமிழ்ச் சொல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தம் மகளாரின் ஆர்வம் நிறைந்த வேண்டுகோட் கிணங்கிச் சுவாமி வேதாசலம், தம் பெயரை 'மறைமலையடிகள்' என்றும், தமது திங்கள் வெளியீடான 'ஞானசாகர'த்தை 'அறிவுக்கடல்' என்றும் மாற்றி யமைத்தனர். அன்றியும், தாமெழுதிய நூல்களின் மறுபதிப்பிலும், எழுதும் நூல்களிலும் வடசொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்களையே ஆள்வாராயினர். இன்று, தமிழன்புடையார் எல்லாரும் தனித் தமிழில் பேரார்வங்கொண்டு அதற்கெனக் கிளர்ச்சிகள் செய்து வருகின்றனர். தமிழ்மொழி வாழவேண்டுமாயின், தனித்தமிழ் வழியாகத்தான் இயங்குதல் வேண்டுமென் றுணர்ந்து அந்நெறி நின்று முயன்று தனித்தமிழியக்கங் கண்ட நீலாம்பிகையம்மையாரைத், தமிழ் மக்கள் என்றென்றும் அன்பார்ந்த நன்றியறிதலுடன் பாராட்டுவார்கள் என்பது திண்ணம்.

வடமொழிப் பயிற்சி

அம்மையார், வடசொல் இது, தமிழ்ச்சொல் இது வென்றறிந்து தனித்தமிழைப் பரப்பும் ஆர்வத்தால் தம் தந்தையாரிடத்து வடமொழி கற்கத்தொடங்கி ஓரளவு அதனைக் கற்றார்.

வடமொழி மட்டுமன்று, ஆங்கிலம் முதலிய எவ்வகைப்பட்ட அயன்மொழிச் சொற்களையும் தமிழிற் கலத்தல் ஆகாது. இவ்வாறே ஒவ்வொரு மொழியும் பிறமொழிக் கலப்பில்லாமல் தனித்தியங்குஞ் சிறப்பினை யடைதல்வேண்டுமென்பதே அம்மையாரின் கருத்தாகும். இஃதறியாதார் வடமொழி வெறுப்பே தனித் தமிழ்த் தோற்றத்திற்குக் காரணம் என்பர். அது தவறு. இன்றியமையாவிடத்து இரண்டொரு அயன்மொழிச் சொற்களைக் கையாள்வது தனித்தமிழ்க் கொள்கைக்கு மாறுபட்டதன்று என்பதும் அம்மையாரின் கருத்தாகும்.

ஆங்கிலப் பயிற்சி

மறைமலையடிகள் நீலாம்பிகையாருக்கு ஆங்கிலமுங் கற்பித்தார். தெனிசன், சேக்குவியர், ஷெல்லி முதலிய ஆங்கில நல்லிசைப் புலவர்கள் செய்த அருஞ்சுவை நிறைந்த இலக்கியப் பகுதிகள் சிலவும் அம்மையாருக்குக் கற்பிக்கப்பட்டன. மேலும், ஆங்கிலங் கற்க விரும்பிய அம்மையார் 1918-க்குப் பிறகு சென்னை, லேடி வில்லிங்டன் கல்லூரியில் இரண்டாண்டுகள் ஆங்கிலம் பயின்றார். இரண்டாண்டுகளிலும் படிப்பின் சிறப்பால் இரட்டைத் தேர்வுகள் (டபிள் பிரமோஷன்) பெற்றார். நாலாம்பாரம் தேறினார்.

திருவரங்கம் பிள்ளை

1890-ல் திருநெல்வேலியை யடுத்துள்ள பாளையங்கோட்டை நகரில்சைவவேளாளர் மரபில் தோன்றிக்கொழும்புமாநகரில் வணிகர் நிலையத்தில் ஊழியம் செய்துவந்த திரு. வ. திருவரங்கம் பிள்ளை என்ற இளைஞர் மறைமலையடிகளின் நூல்களைக் கற்றும், தக்கார் வாயிலாக அவர்தம் சொற்பொழிவின் சிறப்பினைக் கேட்டும் அவர்களைக் கொழும்புமாநகருக்கு 1914, 1917-ஆம் ஆண்டுகளில் வருவித்தார். திருவரங்கனாரின் சிறந்த நன்முயற்சிகளால் கூட்டப்பட்ட ஆரவாரமிக்க பேரவைகளில் மறைமலையடிகளார் அறிவாராய்ச்சி மிக்க விரிவுரைகள் பல நிகழ்த்தினார்கள். அடிகள் விரிவுரைகளில் ஈடுபட்டுப் பெரும்பய னடைந்த கொழும்பு வணிகர், அரசியல் அலுவலாளர், அன்பர் முதலியவர்களிடம் அடிகள் நூலாராய்ச்சிக்கும், நூல்நிலையத்துக்கும் பிறவற்றிற்கும் பயன்படும் வகையில் ஆயிரக்கணக்காகப் பொருள் திரட்டிக் கொடுத்தனர். பின்னும் அடிகள்பால் ஆரா அன்புகொண்ட திருவரங்கனார், அவர்கள் திருத்தொண்டுக்காகச் சில ஆண்டுகள் கொழும்பு மாநகரில் பணம் திரட்டி அனுப்பினர். இத்தகைய அரும்பெறல் உதவிசெய்து தம் திருத்தொண்டுக் குதவியாய் நின்ற திருவரங்க

ஞரின் நற்குண நற்செயல்கள், உள்ளியது முடிக்கும் உயர்ந்த ஆற்றல், ஊக்கம், ஒழுக்கம், பேரன்பு முதலியவற்றில் பெரிதும் ஈடுபட்டு அவர்க்கு ஏதேனுமோர் சிறந்த உதவி செய்தல்வேண்டு மென்னும் ஆர்வங்கொண்டிருந்தார் அடிகள்.

காதல் மலர்ந்தது

நீலாம்பிகையம்மையார் மறைமலையடிகளிடத்துச் செந்தமிழ்ப் புலமை பெற்றும், ஆங்கிலம் அறிந்தும், வடமொழி படித்தும், சிவ வழிபாடு, அடியவர் வழிபாடு, அன்பு அறிவாற்றல்களிற் சிறந்தும், கட்டழகியராய்க் காட்சிக்கினியராய்ப் பதினாறட்டைப் பருவத்தினராய்த் திகழ்ந்துகொண்டிருக்கும் நாட்களில் 1918-ம் ஆண்டில், அடிகளார் விரும்பியபடி அரங்கனார் பல்லாவரம் போந்தார். இவர்தம் பேருதவிகளால் இவரைத் தெய்வம் போல் போற்றி மகிழ்ந்திருந்த அடிகளார் குடும்பத்தினர் இவரைப் பேரன்புடன் வரவேற்றுச் சிறந்த விருந்தூட்டி மகிழ்ந்தனர். சில திங்கள் அடிகளார் மாளிகையில் அரங்கனார் தங்கினார். அந்நாட்களில், இருபத்தெட்டு ஆண்டினராய திருவரங்கனார், தாமரையன்ன பரந்த திருமுகமும், வாளென இலங்கும் பெருங் கண்களும், வரிசைப்பட்ட முத்தென ஒளிரும் புன்முறுவல்களும், கண்ணாடியன்ன கன்னங்களும், செவ்வாம்பல்போன்ற வாயும், திண்டோளும் தடமார்பும், கற்சிலையன்ன யாக்கையும் பெற்று, இள மதகரியெனத் திகழ்ந்தார்.

திருவரங்கனார், அம்மையாரின் கல்வி, கேள்வி, அன்பறிவு, பேரழகு ஆகியவற்றி லீடுபட்டு அவரைப் பாராமற் பார்த்தார். அம்மையாரும் அரங்கனாரின் அருங்குணங்களிலும் அழகிலும் ஈடுபட்டு அவரைக் காணாமற் கண்டார். இருவரகத்திலும் காதல் மலர்ந்தது. அடிகளும் அவர் குடும்பத்தாரும் இக் காதல் மலரைக் கண்டு கண்டு மகிழ்ந்தனர். ஆனால், நம் நாட்டுக் குடும்ப முறைப்படி காதலர் கடிமண நிகழா முன்னர்க் கலந் துரையாடல் ஆகாதன்றோ? அச் சட்டம் இவர்கட்கு மட்டும் புறம்பாகுமோ? இதனாற் காதலர் கவன்றனர். அறிந்த அடிகளார் விரைவில் இவர்கள் திருமணத்தினை நிகழ்த்த ஒப்பினர்.

திருமணத் தடை

1919-ல், சென்னையில், திருவரங்கனார் 'திருசங்கர் கம்பெனி' ஒன் றமைத்தார். அதன் வாயிலாகத் 'திருவாசக விரிவுரை' என்னுந் திங்கள் வெளியீடு ஒன்று வெளியானது. அத் திருவாசக விரிவுரையை வகுத்தார் மறைமலையடிகள். திருவாசகம், முதல்

நான்கு அகவல்களுக்குமட்டுமே விரிவுரை வெளியாயிற்று. இந்நிலையில் பதிப்பாசிரியர்க்கும் விரிவுரையாசிரியர்க்கும் பதிப்பு நூற்களில் பிணக்கு ஏற்பட்டது. அப் பிணக்கால் அம்மையார்-அரங்கனார் திருமணம் தடையுற்றது. காதல் வருத்தம் கரை கடந்தது. அடிகள் குடும்பத்தார் அகம் வெதும்பினர். திருவரங்கனார் திருநெல்வேலி சென்றார். நீலாம்பிகையார் வீட்டிலிருக்க மனங்கொள்ளாமல் சென்னையிலுள்ள முற்சொன்ன லேடி விலிங்டன் கல்லூரியில் சேர்ந்து ஆங்குள்ள பெண்பாலார் விடுதியிற் றங்கி யிருந்தார்.

இளைப்பிருமல் நோய்

சென்னையில், இரண்டாண்டுகளே அம்மையார் ஆங்கிலங் கற்றார். இளைப்பிருமல் நோயினால் (ஆஸ்த்மா) மேற்கொண்டு படிக்க வியலாமல் பல்லாவரஞ் சார்ந்தார். நோய் திங்களுக்கொருமுறை இருமுறை கடுமையாகத் தாக்கிற்று. தம் அரும் பெருஞ் செல்வமெனப் போற்றிய அம்மையார் நோயினால் வாடுவது கண்டு அடிகளார் அனலிடைப்பட்ட நெய்யென அகங்குழைவார்; நெஞ்சு நெக் குருக அழுவார். சித்த ஆயுள்வேத யூனானி ஆங்கில முதலிய மருத்துவத்தில் தேர்ந்தோர் பார்த்தார்கள்; மருந்துகள் கொடுத்தார்கள். சித்த மருத்துவ ஞாயிறு எனச் சிறந்த திரு. பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தரும், டாக்டர் எஸ். தருமாம்பாளும், தம் அருமைக்குழந்தை எனக், கண்ணெனக், குழந்தைப் பருவமுதல் நீலாம்பிகையாரைப் பேரன்புடன் போற்றி வந்தவர்கள், அம்மையார் நோய் நீக்கத் தம் முடல், பொருளையுங் கருதாது இயன்றவகையெல்லாம் முயன்றனர். வினைவலி தலைமையான தல்லவோ? அம்மையாருக் கந்நோய் வாழ்க்கையில் இயல்பாகி அவரைச் சில கிழமைகளில், திங்கள் விட்டும், தொட்டும், மிகுந்தும், குறைந்தும் வருத்தியவண்ணம் இருந்துகொண்டே இருந்தது. நோயில்லா நாட்களில் அம்மையார் கல்வியிற் கருத்தைச் செலுத்தி வந்தார்.

ஆசிரியராதல்

அந்நாட்களில் பல்லாவரத்தில் புதிதாகத் தோன்றிய (1922) வித்யோதயா கல்லூரியில் இரண்டு ஆண்டுகளும், பின் சென்னை இராயபுரத்திலிருந்த நார்த்விக்கல்லூரியிலும் தமிழாசிரியராக 1928 வரையில் அலுவல் பார்த்தார். அம்மையார் குரல் வீணையினும் இனிமையானது. அவ்வினிய குரலால் இனிய செந்தமிழ் விருந்தை மாணவிகள் மனமிக மகிழத் தெளிவாக அமைதியாக ஊட்டுவார். உண் மகிழ்ந்த மாணவ மகளிரும், கண்டு களித்த கல்லூரித் தலைமை

யாசிரியர்களும், ஏனைய ஆசிரியர்களும் அம்மையாரின் அருந் தமிழ்ப் புலமையிலும், கல்வி கேள்விகளிலும் உயர்ந்து சிறந்த நற்பண்புகளிலும் ஈடுபட்டு அவரைப் புகழ்ந்தவண்ணமிருந்தனர். நோயு மிவரைப் பற்றியவண்ண மிருந்தது. அத்துடன் அம்மை யாரின் உள்ளத்தை அரங்கனர் பிரி வென்னும் பெருநோயும் வருத்தி வந்தது.

திருவரங்கனர் திண்மை

திருநெல்வேலியில் திருவரங்கனர் வாளா யிருக்கவில்லை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக மொன்றை நிறுவி, அதற்கு ஆயிரத் திற்கு மேற்பட்ட பங்காளர்களைச் சேர்த்து நூற்றுக்கணக்கான செந்தமிழ் நூல்களை நன்முறையில் அச்சிட்டுச் செந்தமிழ் மொழியை வளர்த்தும், சைவ சித்தாந்தக் கழக வாயிலாய்ச் சைவ சமய எழுச்சியைப் பரப்பியும் நற்றொண்டுகளில் ஒன்று பட் டிருந்தனர். எனினும், நீலாம்பிகையாரை மறக்க வியலாமல் தம் மனக்கோயிலில் அவர்க்குத் தனியிடம் அமைத்துக் காதல் வழிபாடு புரிந்துகொண்டே இருந்தனர். இங்ஙனம் காதலரிருவர் சீரிய ஒழுக்கநெறியில் நின்று காதல் நோன்பு நோற்பது கண்டு, அவர்தம் உற்றாரும், பெற்றாரும், பிறரும் வருந்தி நின்றனர்.

மறைமலையடிகள் கூற்று

"நீலாவும் திருவரங்கமும் மணந்துகொள்வதில் எனக்குத் தடையில்லை. மணத்திற்குரிய பொன் பொருள்களை யானே வழங்குவேன். என் குடும்பத்தாரும் மணத்திற் கலந்துகொள் வர். ஆயின், மண நிகழுமிடத்தில் யானிருத்தல் இயலாது" என் றடுத்தடுத்துக் கூறினர் மறைமலையடிகள். நீலாம்பிகையாரை மணந்துகொள்ளும்படி வற்புறுத்தினர். அம்மையார், தந்தையா ரின்றி மணந்துகொள்ளச் சற்றும் விரும்பவில்லை. அரங்கனரும் அம்மையாரின் தந்தையை ஒதுக்கிவிட்டு மணக்கவோ, நீலாம்பி கையை அழைத்துப்போகவோ எண்ணவுமில்லை. இருவருங் காதல் கொண்டு ஆண்டுகள் பத்தாயின. காத லுறுதி தளரவில்லை; வளர்ந்தது. உள்ளத்தின் உறுதியும் அன்பும் உலகை எவ்வகை யிலும் ஆட்டுவிக்குமன்றே?

திருமணம்

மறைமலை அடிகளாரின் மனச்செற்றமும்; காதலர் நோன் புறுதி கண்டு உருகிற்று. இஃதறிந்த திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை (எம்.ஏ., எம்.எல்., தாகூர் சட்ட விரிவுரையாளர்) திரு

வரங்கனாருடன் பல்லாவரம் போந்து அம்மையார்-அரங்கனார் திருமணத்தை முன்னின்று நடத்தித் தருமாறு வேண்ட, அவரும் மனமகிழ்ந் திசைந்தார். இஃதறிந்து திருவரங்கனார் மகிழ்ந்து அடிகளார் திருவடிகளில் வணங்கினார். மணமக்கள் விரும்பியபடி சென்னைத் திருமயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் 2-9-1927-ஆம் நாளில் மறைமலையடிகளார் தம்மருமை மகளார் நீலாம்பிகையாரைக் கொடுப்பத் திருவரங்கனார் கொள்ளத் திருமணம் இனிது நிகழ்ந்தது. அத் திருமணத்திற்கு 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப் பெரும் புலவர்பெருமக்களான பா. வே. மாணிக்க நாய்க்கர், கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கா. நமச்சிவாய முதலியார், மணி. திருநாவுக்கரசு முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய நல்லோர்களும் இசைவாணர். சா. சுந்தர ஓதுவாமூர்த்திகளும் மற்றும் பலவகைகளிற் சிறந்த பெருமக்களும் அன்பர்களும் அத் திருமணத்தில் காட்சியளித்தமை வரலாற்றில் இடம்பெறத்தக்கது.

மறுநாள் மறைமலையடிகள் தம் பல்லாவரம் பொதுநிலைக் கழக மாளிகையில் மணமக்களை வரவேற்றுப் பெருவிருந்தளித்தார். அவ் விருந்துக்கும் முற்கூறிய புலவர் பெருமக்களும் பிறரும் வந்து சிறப்பித்தனர். மணி. திருநாவுக்கரசு முதலியார் மணமக்களை வாழ்த்துப்பாக் கூறி வாழ்த்தினர். திரு. சா. சுந்தர ஓதுவாமூர்த்திகள் "வள்ளி திருமணம்" என்ற பொருள்பற்றி இசையரங்கியற்றி மணமக்களை இன்புறுத்தினர். யாவருங் களிப் பெனுங் கடலி லாழ்ந்தனர்.

வாழ்வு

அம்மையாரும் அரங்கனாரும் பண்டைத் தண்டமி ழிலக்கியங்களிற் கண்ட தலைவர் தலைவியரென வாழ்ந்தனர். திருவள்ளுவர் கூறிய வாழ்க்கைத் துணைநலம் பற்றிய பொருளுரைக்கோர் எடுத்துக்காட்டென அம்மையார் விளங்கினர். அரங்கனாரும் அம்மையாரும் ஒருவர் மற்றவர்க்கென்றே அழகிற் றிகழ்ந்தனர்; அன்பிற் சிறந்தனர்; அருளில் வாழ்ந்தனர். இருவரும் ஒருயிராய் நின்று கடவுட் போற்றியும், சுற்றந் தாங்கியும் விருந்து புரந்தும் இல்லறத்தை நல்லறமாக நடத்தினர். தம் வாழ்க்கையின் பயன் செந்தமிழ் வளர்த்தலும் சிவநெறி பரப்பலும் என்றே கொண்டு அவற்றினுக்காக இடையீ டின்றிப் பணியாற்றி வந்தனர். இவர் தம் அன்பு வாழ்க்கையைக் கண்டா ரெல்லாரும் "இவரனைய இல்லறத் துணைவரை நூல்களிற் கேட்டோம்; இன்றே, நேரிற்காணும் பேறு பெற்றோம்" என மகிழ்ந்தனர்.

மக்கட்பேறு

அம்மையார் அரங்கனாரை மணந்தபின் தமிழாசிரியர் வேலையை விடுத்துப் பாளையங்கோட்டையிலுள்ள தங் கணவனாரில்லத்தில் 1928-ஆம் ஆண்டு முதல் வாழலானார். சற்றேறக் குறைய ஆண்டுக்கொரு குழந்தையாகப் பதினொரு மக்களை ஈன்றார். அவற்றில் பெண்மக்கள் எண்மர்; ஆண்மக்கள் மூவர். மக்களைப் போற்றி அன்புடன் வளர்ப்பதில் அம்மையார் இணையற்றவரென்றே இயம்பலாம். குழந்தைகள் செய்யுங் குறும்பும் தொல்லைகளும் அவர்க்குப் பேரின்பம். அவைகளை வையவோ அடிக்கவோ அவர் மனம் இடந் தராது. இத்தனைக் குழந்தைகள் எற்றுக்கு? இவைகளால் துன்பமே என்று உலகவர் நினைப்பர். அம்மையாரைக் கேட்டால் இன்னும் எனக்குக் குழந்தைகள் வேண்டு மென்றே கூறுவார்; கூறியு மிருக்கின்றார். அம்மையார் வாழ்க்கையைத் துன்பக்கடலென்றே கூறிவிடலாம். அதிலவர் பெற்ற இன்பப் பெரும் புணை மூன்று. அவையாவன: 1. 'சிவன் பணியுஞ் செந்தமிழ் வளர்ப்பும். 2. ஆருயிர்க் கணவர். 3. மக்கள். தம் மக்களைக் காண்டொறும் காண்டொறும் அளவிலா இன்ப முற்ற அம்மையார் 'என் பெருஞ்செல்வம் இவைகளே' என்றும், சிவபிரான் எனக்களித்த அருள் வடிவங்களே இவைகள் என்றும், அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்து மகிழ்ந்தார்.

நோயும் மெலிவும்

1920-ல் அம்மையாரைப் பீடித்த இளைப்பிருமல் நோய் 1930 வரையில் இடையிடையே வருத்தி வந்தது. அதுகண்டு மிக வருந்திய திருவரங்கனார் நோய் நீக்கத்திற் கென்று செய்த முயற்சிகள் எழுத்தி லடங்கா. திருவரங்கனாரின் அருமை நண்பர் திரு. கீழப்பாட்டம் பிச்சாண்டியாபிள்ளை என்னுந் தமிழ் மருத்துவர் அன்பும், அருளும், உருக்கமுங் கொண்டு அருமருந்துகள் பலவற்றை வருந்திச் செய்து, அம்மையார்க் களிப்ப, நோய் நீங்கினார். நன்றியுணர்வு மிகுந்த அம்மையார், பிச்சாண்டியா பிள்ளையின் பேரன்பைப் போற்றும் வகையில் தாமெழுதிய நூல் ஒன்றை அவர் நினைவாக வெளியிட்டும், தம் மக்களில் ஒருத்திக்குப் 'பிச்சம்மை' என்று பெயரிட்டும் மகிழ்ந்தார். அம்மையாரைத் துன்புறுத்தி வந்த நோய் ஒழிந்ததெனினும், இரவிலும் விழித்துப் பிள்ளைகளைப் பேணுதலினாலும், இதனால் நேர்ந்த மெலிவினாலும் அம்மையார் எப்போதும் நலிந்தவராகவே இருந்தார். கணவனார் அம்மையார் நலத்திலேயே நாட்டஞ் செலுத்திக் கவலையில் ஆழ்ந்திருந்தார். இங்ஙிலையிலும் தம் மன்பு என்னு மமுதத்தால் இருவரும் உலகத் துன்பத்தை மறந்து இன்புற்றே வாழ்ந்தனர்.

மக்கள் பணி—தனித்தமிழ் வளர்ப்பு

தமிழ் வளர்க்கவும் சிவநெறி பேணவுமே உடலெடுத்த அம்மையார், தம்முட னலத்தைப் பொருட்படுத்தாது தம் பணியில் ஊன்றிக் கருத்துடையரா யிருந்தார். 1920-ல், அம்மையார் தனித் தமி ழியக்கங் கண்டவுடனே அதுபற்றிய கட்டுரைகள் வரைந்து செய்தித் தாள்களுக்கும் திங்கள் வெளியீடுகளுக்கும் அனுப்பினர். பலவிடங்களிலிருந்து தனித்தமிழ்க் கொள்கையை மறுத்துக் கட்டுரைகள் வெளியாயின; பேச்சுக்கள் நிகழ்ந்தன; கேள்விகள் எழும்பின. 'தனித்தமிழிலே ஒரு நூலேனு முண்டோ? எழுதத் தான் முடியுமோ?' என்று சிலர் அம்மையாரைச் செய்தித்தாள், திங்கள் வெளியீடு வாயிலாக வினவினர். அவற்றிற்கெல்லாம் விடையளிக்கும்வகையில் 1925-ல், "தனித்தமிழ்க் கட்டுரைகள்" என்னும் நூலை முதன்முதலாக வெளியிட்டனர். அந்நூலில், பதின் மூன்று கட்டுரைகள் பல பொருள்கள்பற்றி அம்மையாரால் எழுதப் பட்டன. அந்நூலின் பொருட்சிறப்பும், சொல் லினிமையும், நடையழகும் தமிழ் மக்களைப் பெரிதும் மகிழ்ச்சியி லாழ்த்தின. கிளர்ச்சியு மூட்டின. (தனித்தமிழ் இயக்கமும் பெருகிற்று.) தனித் தமி ழியங்க முடியும்; அதில் நூலும் எழுதலாம் என்ற நன்னம்பிக்கையும், உணர்ச்சியும் தமிழர் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தன. தனித்தமி ழியக்கங் கண்ட அம்மையாரைத் தமிழுலகம் வாழ்த்திற்று; பாராட்டிற்று. மறைமலையடிகளாரும், மற்றுமுள்ள புலவர் பெருமக்களும், பிறரும், பேச்சிலும் எழுத்திலும் தனித்தமிழை வளர்த்து வந்தனர்; வருகின்றனர். இன்றோ, 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் ஞாயிறு 'கலப்புத்தமிழ்' என்னும் இருளை எங்கு மொடுக்கித் தன்னொளி வீசுகின்றது. தனித்தமிழ் வாழ்க! தனித்தமி ழியக்கங் கண்ட நீலாம்பிகையார் புகழ் பெருக!! அவர்க்குத் தனித்தமிழ் உணர்வளித்த மறைமலையடிகள் வாழ்க!!!

அம்மையார் அளித்த அருந்தமிழ் நூல்கள்

அம்மையார் தம் கணவருடன் வாழ்ந்த காலத்தில் பட்ட துன்பங்க ளெல்லாம் மேலே கூறப்பட்டுள. அந்நிலையிலும் அவர்கள் படித்தல், எழுதல் என்ற இரு செயலையும் கைவிட முடியவில்லை. சற்று நோய் தணிந்தாலும் உடனே எழுதல் படித்தல் வேலையைத் தொடங்கிவிடுவார். அத்தொழில் மூச்சுவிடுதல் போல் இன்றியமையாததாயிற்று. நூலெழுதும் வகையில் அம்மையார்க்கு அரங்கனர் புரிந்த உதவிகள் அளவி லடங்கா. கணவ ரிருந்தபோது பத்தும், அதன்பிறகு இரண்டும், தந்தையார் வீட்டி

லிருந்து யாத்த தனித்தமிழ்க் கட்டுரைகள் என்ற நூலுமாக அம்மையார் தமிழ் மக்களுக்கு அருளுடன் அளித்த அருந்தமிழ்ச் செல்வங்கள் பதின்மூன்றாகும். அவையாவன :—

1. தனித்தமிழ்க் கட்டுரைகள்
2. முப்பெண்மணிகள் வரலாறு.
3. எலிசபெத் பிரை
4. தமிழ்நாடும் தமிழ்மொழியும் முன்னேறுவ தெப்படி?
5. ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும், ஆங்கிலப் பழமொழிகளும்
6. வடசொற் றமிழ் அகரவரிசை
7. ஜோன் வரலாறு
8. பிளாரென்ஸ் நைட்டிங்கேல்
9. அருஞ்செயன் மூவர்
10. மேனாட்டுப் பெண்மணிகள் (முதற் பகுதி)
11. மேனாட்டுப் பெண்மணிகள் (இரண்டாம் பகுதி)
12. பழந் தமிழ் மாதர்
13. நால்வர் வரலாறு.

அம்மையாரின் நூற்கருத்துக்கள்

அம்மையார் பணி பெரும்பாலும், மாதர் முன்னேற்றங் கருதியவை. சிவபத்தியை வளர்த்தலும், செந்தமிழ் வளர்த்தலும், அதற்கடுத்த படியில் எண்ணப்படுவனவாம். தனித்தமிழை வற்புறுத்தலும், போலி ஆரவாரங்களை மறுத்தலும், உண்மை ஒழுக்கங்களை எடுத்துரைத்தலும், சங்க கால நூல்களின் அற முறைகளை விளக்குதலும், அடியார் திறங்களைத் தெரித்தலும், மேல்நாட்டவரின் அருங்குணங்களை உரைத்தலும், அவற்றைத் தமிழ் மக்களும் பூண்டு நலம்பெற வற்புறுத்தலும், ஊனுணவை மறுத்தலும், ஒப்புரவறிதலும், பிறவும் அம்மையார் நூல்களில் அமைந்து கிடக்கும். இக் கருத்துக்கள் யாவும், இனிய ஓசையில் தெளிந்த நடையில், தனித்தமிழில் அமைந்து படிப்போர் உள்ளத்தில் பெருமகிழ்ச்சி விளைப்பனவாகும். தனித்தமிழ்க் கொள்கைக்கு மாறானவர்கள்கூட அவர்தம் தேனொழுகுந் தெளிந்த செந்தமிழ் நடையைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்திருக்கின்றனர்.

மற்றோர் பிணி

1943-ஆம் ஆண்டில் அம்மையார் பெரும்பாடு என்னும் நோயால் பற்றப்பட்டனர். முன்னமே பத்தாண்டுகள் இளைப் பிருமலினாலும், பின்னர் மக்கட்பேற்றின் நலிவினாலும், வலுக் குறைவுட னிருந்த அம்மையாரை இந்நோய் கொடுமையாகத் தாக்கியதால் அவர் உடல்நிலை பெரிதும் சீர்கெட்டது. ஆருயிர்க் காதலர் திருவரங்கனார் உடனலமும் உளநலமும் அம்மையார் நோய் கண்டு பெரிதும் கெட்டன. செய்யா மருத்துவங்க ளில்லை; உண்ணாத மருந்து மில்லை. பணச் செலவை யார் பொருட்படுத்தியது. தமக்காகத் திருவரங்கனாரின் பரிவு கண்டு அம்மையார் கலங்கினர். அவர் சில ஆண்டுகளாக நெஞ்சு வலி என்று கூறுவது கண்டு நெஞ்சங் குழைந்தார். மனைவியார், அரங்கனார் நிலைகண்டு மனம் பதைத்தார். உறவினர் அடைந்த துன்பம் உரைக்கவொண்ணாது.

துன்பத்தில் துன்பம்

1944-ஆம் ஆண்டு ஏப்ரல், திருநெல்வேலிச் சில்லா, டோனாவூர் மருத்துவ சாலையில் அம்மையார் நோயை நீக்குதற்கென அறுவை நடந்தது. ஒரு கிழமை (வாரம்) கழிந்தது. அம்மையார் தம் மில்லம் வந்து சேர்ந்தார். மறுநாள், சற்றும் எதிர்பாராதிருக்கை யில் (28-4-1944) திடுமெனத் திருவரங்கனார் சிவன்சேவடியடைந் தார். அம்மையா ரடைந்த துன்பத்தை யாரால் சொல்லி முடியும்? எம்மொழியால் எழுத முடியும்? அவர் பட்ட துன்பத்தை ஒருவாறு உணரலாமே யொழிய, உரைக்க வொண்ணுமோ?

பின் வாழ்வு

தம் ஆருயிர்க் கணவரின் பிரிவுக்குப்பின் அம்மையார் உயிர் போன உட லென வாழ்ந்தார். தம்மருமை மக்களுக்காகவே உயிர் தாங்கி யிருப்பதாகச் சொல்வார். எனினும், அழுந்திய சிவபத்தியின் மாண்பினாலும், கற்ற கல்வி கேள்விகளினாலும், இயல்பா யமைந்த நற்பண்புகளினாலும், அம்மையார் ஒருவாறு தேறி அமைதியுடன் வாழ்ந்தார். ஒற்றை வெண்புடைவையும், நெற்றி நிறைந்த நீறும், இயல்பான செம்மை நலமுமே அவர்க்கு அணிகலன்களாகத் திகழ்ந்தன. அம்மையாரின் இந்த அருமைக் கோலம் திலகவதியம்மையின் சைவத் தெய்வத் திருக்கோலத்தை நினைப்பூட்டிக்கொண்டே இருக்கும்.

திருவரங்கனார் பிரிவுக்குப் பிறகு அம்மையார் குடும்பத்தைத் தாய்போற் பேரன்பினராய்ப் பேணிக்காத்தவர், திரு. வ. சுப்பையா

பிள்ளையவர்களாவர். இவர் திருவரங்கனாரின் தம்பி. அண்ணனாரிடத்துப் பேரன்பு வாய்ந்தவர். அதைவிட அண்ணியாரிடத்துப் பேரன்பு கொண்டவர். கழகம் தோன்றிய நாள் முதல் அண்ணனாருடனிருந்து சிவத்தொண்டு, தமிழ்த்தொண்டுகளாற்றிவருகின்றனர். இவர்தம் அன்பார்ந்த பாதுகாப்பும், அரங்கனாரின் தொண்டினைப் பெரிதும் போற்றிய வகையில் வாழ்க்கைக்குப் போதிய வருவாய் இல்லாத அக் குடும்பத்தினருக்குத் திங்கள்தோறும் கழகப் பணத்திலிருந்து கடமைப்பொருள் கொடுத் துதவும் கழகத்தாரின் அரிய உதவியும் அம்மையாரின் குடும்பக் கவலையைப் பெரிதளவு குறைத்துவிட்டன. திருவரங்கனாரின் அரும் பெருந் தொண்டினையும் அவர்தம் குடும்ப நிலையினையு மறிந்து தம் கடமையுணர்ந்து கழகத் தலைவர்கள் அம்மையார் குடும்பத்திற்கு இயன்றவரை உதவிகள் செய்துவருவது தமிழ் மக்களின் பாராட்டுதலுக் குரித்தாகின்றது.

அம்மையார் மறைவு

அரங்கனாருக்குப்பின் அம்மையார் வாழ்வு ஒருவாறு அமைதியாக நடந்துகொண்டிருந்தது. 8-10-45-ல், சுப்பையா பிள்ளை பாளையங்கோட்டையிலிருந்து சென்றார். 10-10-45-ல் அம்மையார் காய்ச்சல் என்று படுத்தார். காய்ச்சல் ஒரு கிழமை ஆகியும் தணியவில்லை. வெம்மை யளவு 104° (டிகிரி) வரையில் உயர்ந்தது; 102°-க்குக் குறையவில்லை. இஃதறிந்து வருந்திப் பரபரப்புடன் சுப்பையா பிள்ளை, 20-10-45-ல் பாளை மீண்டார். அறிவும் உலகியல் உணர்வும் வயதும் நிறைந்த திரு. டாக்டர். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் அம்மையாரைத். தம்மருமை மகளென அன்புடன் விழிப்பாய் உன்னிப்பார்த்தார். தக்க மருந்துகள் கொடுக்கப்பட்டன. காய்ச்சல் தணிதலில்லை. அம்மையார் நம்பிக்கையிழந்தார். "என் தம்பி மறை. திருநாவுக்கரசுக்கும், அவன் மனைவிக்கும் வருமாறு தந்தி கொடுங்கள்" என்றார். சுப்பையா பிள்ளை அனலிற் பட்ட புழுவெனத் துடித்தார். 24-10-45-ல், மறை. திருநாவுக்கரசின் மனைவியார் அறிவம்மையார் பாளையங்கோட்டை போந்து அம்மையாருக் கிரவுபகலாகப் பணிவிடை புரிந்துவந்தார். அம்மையாரின் பெற்றோர்க்கும் உடன் பிறந்தார்கட்கும் அன்றன்று காய்ச்சல் நிலைபற்றிக் கடிதப் போக்கு வரவு நிகழ்ந்துகொண்டே இருந்தது. எங்கும் கவலையும், கலக்கமும், அச்சமும் குடிகொண்டிருந்தன. 'கவலைக் கிடமாயிருக்கின்றது; புறப்படுக' என்று தந்தி கிடைக்கவே, 3-11-45 பிற்பகல் பாளை சென்று, மறை. திருநாவுக்கரசு, தம் அருமைத் தமக்கையாரைக் கண்டார். காய்ச்சலுடன் இருமல்; இருமல்

சளியுடன் இரத்தங் கொட்டல். இவற்றுடன் 4-12-45-லிருந்து கைகால்களை அசைத்தல், எழுந்துட்கார நடக்க முந்துதல் முதலி யனவும், இடையிடையே இரண்டொரு சொற்கள் உணர்விழந்தும் பேசுதல் ஆகிய செயல்கள் அம்மையாரிடங் காணப்பட்டன. அன்று மாலை அனைவரையும் அழைத்தார். மைத்துனரைப் பார்த்து, "இனி, யான் பிழைக்கமாட்டேன்; என் மக்களை அன் புடன் பாதுகாத்தல்வேண்டும். எனக்கு உயிர்விட விருப்ப மில்லை; பிள்ளைகளுக்காக வாழவே விரும்புகின்றேன்.. ஆனால், சிவபிரான் அழைக்கின்றான். நான் என் செய்ய!" என்று இயல் பாகச் சொன்னார். மறை. திருநாவுக்கரசு, அறிவம்மை, சுப்பையா பிள்ளை மனைவி, தம் மாமியார் முதலியோரிடமும் தம் மக்களை அன்புடன் பாதுகாக்க வேண்டுமென வேண்டினார். மக்களெல் லாரையும் பெயரிட்டழைத்துப் பேசினார்; முத்தமிட்டார். இரவு 9-மணி. அம்பலவாணன் படத்தைக்கொண்டுவந்து தம்மருகே மாட்டச் சொன்னார். அதற்குப் பூ அணியச்சொன்னார். அவை செய்யப்பட்டன. வணங்கினார். எழுந்துட்கார்ந்து, "புண்ணி யனே! உன்னடிக்கே போதுகின்றேன்; பூம்புகலூர் மேவுகின்ற புண்ணியனே!" என்று திருத்தாண்டக அடிகளைக் கூறினார். "அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே!" என்று திருவாசக அடிகளைக் கூறி இறைஞ்சினார். அதற்குமேல் பேசல் அவரால் இயலவில்லை. இரவு 1 மணி, தமக் குப் பணிசெய்துகொண்டிருந்த தம்பியைத் 'தேவாரம் பாடுக' என்றார். 2 மணிக்கும் அவ்வாறே கூறினார். அவர் பாடினார். இரவெல்லாம் உறக்கமேயில்லை. கைகால்களைப் புரட்டிக்கொண்டும் வருந்திக்கொண்டுமிருந்தார். பொழுது விடிந்தது. தான் பிழைத் தல் இயலாதென்றார். 'விரைவில் இறப்பேன்' என்றார். பிள்ளை கள் எல்லாரையும் அருகழைத்து இனிமையாகப் பார்த்தார்; முத்தமிட்டார்.

5-11-45 திங்கட்கிழமை பகல் 11-மணிக்கு அம்மையார் இறப்புத் துன்பத்திற் (மரணாவஸ்தை)காளானார். உடனே மறை. திருநாவுக்கரசு அம்மையார் அருகமர்ந்து அவர் தலைமீது திரு வாசகத்தைப் பொருத்தி வைத்து, அதிலுள்ள பாடல்கள் பலவும், தேவாரத் திருமுறைகளிலுள்ள பாடல்கள் பலவும் பாடினார். உடற்புரட்டலும், கைகால் இழுப்பும் மிகுதியாகியும் அம்மையார், பாடல்களை மிகவும் உன்னிப்பாய்க் கேட்டார். தாமும், "அம் மையே அப்பா!" என்ற திருவாசகத்தில் பாதியளவு பாடினார். மணி 12. தம் மக்களை விளித்துப் பார்த்தார். மறை. திரு நாவுக்கரசு, "அக்கா! இந்நேரத்தில் மக்களை நினைத்தல் ஆகாது. கூத்தன் திருவுருவத்தையே நினைத்தல் வேண்டுமென, அம்மை

யார், 'ஆம்' என்று சொல்லிக்கூத்தன் படத்தைத் தம் இருகைக ளாலும் பற்றி, மார்புமீது வைத்துக்கொண்டு சிறிதுநேரம் பார்த் தார். அது வாங்கிக்கொள்ளப்பட்டது. கடைசியில் அம்மை யாரின் வாயினின்றும் 'திருநீறணிக' என்றும், 'சிவ' என்றும் சொற்கள் வந்தன. நீறணிவிக்கப்பட்டது. கைகளால் வணங்கினர்.

பிறகு, அம்மையாரால் பேசல் முடியாதுபோயிற்று. மறை. திருநாவுக்கரசு, 'சிவாயநம' 'நமச்சிவாய' 'அம்மையப்பா', அம்பல வாணு!' 'கூத்தா' என்ற திருப்பெயர்களை உயர்ந்த குரலில் ஆர்வம் ததும்ப முழங்கிக்கொண்டே இருந்தார். அம்மையார், அவற்றிற் கெல்லாம் ஊங்காரம் கொடுத்துக்கொண்டேயிருந்தார். 12¾-மணி. அதுவுமியலாது போனபோது, திருப்பெய ரொவ்வொன்றற்கும் தலையசைத்தார். 1 மணி. அப்போதும் சிவன் பெயர்களைக் கேட்டது கட்குறிப்பால் அறியலாயிற்று. 1-10-மணிக்குக் கண் களை மூடினர். சிவன் திருப்பேர் ஒலியுடன் அம்மையார் ஆருயிர் சிவன் சேவடியில் 1-16-மணிக்குக் கலந்தது.

குறிப்பு:—அன்று மாலையே (5-11-45) அம்மையாரின் திரு வுடல் சிவபிரானின் பொங்கழ லுருவில் சேர்க்கப்பெற்றது. 15-11-45-ல், இல்லத்திலேயே வீண் சடங்குகள் எல்லாம் நீக்கித் தீ வளர்த்தும், திருமுறை ஓதியும், சிவ வழிபாடு செய்யப்பெற் றது. அம்மையார் வழிபாடும் ஆற்றப்பட்டது.

வியப்பும் போற்றலும்

இறப்புத் துன்பத் துடிப்பில் எவர்க்கு மிராத சிவ நினைவும், போற்றுதலும், ஆருயிர் பிரியும் வரையில் அம்மையார்பால் காணப்பட்டதும்; காதற்பிரிவு, இடையீடில்லா நோய், பிள்ளைப் பேறு இவற்றிற்கிடையில் செந்தமிழ் வளர்ப்பிலும் சிவநெறி யோம்பலிலும் ஈடுபட்டிருந்ததும்; பல நூல்கள் வரைந்தும் சொற் பொழிவுகள் ஆற்றியும், இல்லறத்தைச் சிறக்க நடத்தியும் யாவ ராலும் போற்றப்பெற்ற உயர்ந்தாராக விளங்கியதும் நினையுங்கால், அம்மையாரின் அருந்திறற் பண்புகளைப் பெரிதெடுத்து வியந்து பாராட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். அம்மையப்பர் சேவடியில் அம்மையாரின் ஆருயிர் இன்புறுவதாக! ஓம் சிவம்.

இந்நிகழ்ச்சிக்கு நெருங்கிய உறவினர்களும் நண்பர்களுமாக இருபதின்மரே அழைக்கப்பெற்றனர். அம்மையாரின் என்புஞ் சாம்பரும் சிறிதே எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. அவை களை இடுகாட்டில் வைத்து, மேலே அம்மையார்-அரங்கனுர் வர

லாற்றுக் குறிப்புக்கள் சில பொறித்துக் கல் நடுதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அம்மையார்க்கு இப்போது ஆறு பெண்மக்களும், இரண்டு ஆண்மக்களும் இருக்கின்றனர். மூத்த பெண்ணுக்குப் பதினை யாண்டு. கடைசி பையனுக்கு மூன்றாண்டு. மாமியாரும் ஒரே மைத்துனரான சுப்பையா பிள்ளையும், தாய் தந்தையரும், தம்பி யர் நால்வரும், தங்கை ஒருவரு முண்டு. அம்மையாரின் மக்கள், சுப்பையா பிள்ளை அவர்கள் மனைவியார்தம் அன்பார்ந்த பாது காப்பி லிருக்கின்றனர். இம்மக்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்நா ளளவும் திங்கள் ஒன்றுக்கு ரூபா பன்னிரண்டரை மட்டும் கட மைப் பணமாகக் கழகத்தால் கொடுக்கப்படுகின்றது.

அம்மையார் எழுதிய நூல்களைப் பரப்புதலும், படித்தலும், அதன்வழி நிற்றலும், தனித்தமிழை வழங்குதலுமே அம்மை யார்க்குத் தமிழ் மக்கள் ஆற்றவேண்டிய நீங்காக் கடமைகளாகும். இச் செயல்களால் அம்மையார் ஆருயிர் அமைதியும் இன்பமும் ஒருங்கே பெறும்.

அம்மையார் நூல்களைப்பற்றிய விளம்பரம் இந்நூ லிறுதிப் பக்கத்திற் சேர்க்கப்பெற்றிருக்கிறது. அம்மையார் நூல்களைப் படிப்பதால் தனித்தமிழ்ப் பற்றும், சிவநேயமும், மாதர் முன் னேற்ற உணர்ச்சியும், விருந்தோம்பலும் முதலான நற்பண்புகள் அமையப் பெறுவது உறுதி.

அம்மையார் நூல்களை வாங்கிப் படிப்பதே அவர்தம் குடும் பத்துக்குச் செய்யும் உதவியாகும்.

இவ்வரலாற்றுச் சுருக்கம் அம்மையாரின் தம்பியர் மறை. **திருநாவுக் கரசனால் எழுதப்பட்டது.**

திருவாட்டி நீலாம்பிகையம்மையார் பிரிவுபற்றிப் புலவர் சிலர் பாடிய

இரங்கற் பாக்கள்

பட்ட காலிலே படுமெனும் பழமொழிப்
பட்ட வரங்கனூர் பத்தினி பிள்ளைமைப்
பட்ட வெண்மறை விட்டிறந் துண்மைகைப்
பட்ட போதியான் பட்டதை யென்சொல்வேன்!

தனித்தமிழ் இயக்கினைத் தாங்குவார் தம்மையே
தனிப்பட வளைத்தனன் தகையில் கூற்றுவன்
இனித்தமிழ் என்னிலை எய்து மோவெனப்
பனிப்பவர் தீக்குறி பார்ப்ப தற்கிதோ!

புதுவதே யன்றுயிர் போவ தியல்பென
முதுவரும் முன்னரே மொழிந்த துண்மையால்
இதுவரை யிருந்தமைக் கிறையை யேத்தியே
கதுமென யாஞ்செயுங் கடமை முற்றுவோம்.

—சேலம், வித்துவான் ஞா. தேவநேயன், M.O.L.

பரிதற் பா

நீலாம் பிகையும் நிமலனடிப் பட்டனள்
கால னழைக்கக்கை விட்டனன் மருத்துவன்
பாலர்கள் பாலைகள் எண்மருந் தவிக்கவே.

வாணி வரம்பெற்ற வாணினி மறைந்தனள்
ஆணித் தரமா வநேகநூல் இழைத்தவள்
பேணினள் தமிழைப் பிரியத் துடனே.

என்னினிய இளவலென எவருங்கண் டுளங்களிக்க இணைந்தே எங்கும்
முன்னுபொருள் வளம்பெருக்கி முத்தமிழும் வளர்த்தமூ தறிஞன் நண்பன்
தன்னிகரில் தாளாளன் திருவரங்கம் எனும்பெயர்க்கே தகைமை சான்
[றோன்
மன்னவரும் வியக்குமுறை மாநாடு பலநடத்து வண்மை மிக்கான்.

மூவாறிற் குறையோராண் டில்வாழ்க்கைச் சகரேர்ந்து முதிர்ந்த பண்பால்
பாவேறு புலவரகம் பரிந்துபுகு கலைவல்லான் பாரில் எங்கும்
சாவேறு தாள்வே(று)என் றறைதுணியான் உயர்வாகச் சார்ந்த மக்கள்
தாவேறு தலையறியாச் சமனாட்சிச் சிவநெறியன் தண்மை சார்ந்தோன்.

மண்பிரிந்த மதியிரோன்பான் நிறைதலும்ஐப் பசியிருபான் மதிநாள் [மக்கள்
கண்பிரிந்த நீர்பெருக்கக் கடியவாண் டினள்மாமி கலங்கி எங்கப்
பண்பிரிந்த பாட்டொலிபோல் பகரெம்பி சுப்பையன் பரிவுற் றேங்க
எண்பிரிந்த வளைப்போல எய்தினைவிண் எமர்துன்பம் இயம்பப் போமோ?

மக்களொரு பாற்புலம்ப மாமியொரு பாலலற
ஒக்கலெலாங் கூடி ஒலிபெருக்க—மிக்கதமிழ்
அன்னை இரங்க அலுவலகத் தார்புலம்ப
என்னைநீ லாபிரிந்தாய் இங்கு !

—திருச்சி, வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியார்.

திடுக்கிட்டேன் தீச்செய்தி திருநீலாம் பிகையம்மை
சென்றா ரென்றே
நடுக்குற்ற மொழிகண்டேன் நலிவுற்றேன் உளம்நைந்தேன்
நாளை நொந்தேன்
உடுக்கையிழந் தவர்கைபோல் உயர்தனிச்செம் மொழித்தமிழ்க்கே
உரைநூ லாற்றிக்
கொடுக்கும்கலை மகளிவர்போல் புலவர்கொளு நாள்நினைந்தேன்
கொண்டேன் துன்பம்.

என்அன்னை தமிழ்வளர்த்தாள் எழினலமார் உரைநடைநூல்
இயனூ லணியாய்த்
தன்நிகரில் தமிழ்ச்சொல்லால் தந்தபெருங் கலைச்செல்வி
தமிழ்ப்பே ரன்பால்
முன்உற்ற திருவரங்கர் பொன்னாட்டில் தமிழ்த்தொண்டில்
முயல எண்ணி
அன்புற்றே அழைத்திடவே அருமைமக்கள் உறவுமற்றும்
மறந்தாள் என்னே !

மறைமலையின் மகளாகித் திருவரங்கர் துணைபற்றி
மதிபெற் றோங்கி
நிறைதமிழால் உரைநடைநூல் தமிழ்நிலத்தில் பயிராக்கி
நிலைத்த புகழின்
குறைவுபடாத் தமிழ்ச்சொல்லால் வடசொல்லின் துடுக்கடக்கிக்
குறையாக் கல்வித்
துறைபயில்நீ லாம்பிகையார் விண்ணுற்றார் மண்வாழ்நர்
துயரே பூண்டார்.

ஈதென்ன வியனுலகே! ஈடேற வகையுணராய்
தீதுள்ள செயல்புரிந்தாய் திருநீலாம் பிகையம்மை
சீருள்ள உயிர்கவர்ந்த சிறியனே நீ ஒறுக்காமல்
நீருற்றும் நிலனுற்றும் நிற்கின்றாய், பயனென்னே ?

செந்தமிழின் திருப்புதல்வி திருவரங்க நீலாளென் செல்வி சீரார்
பைந்தமிழ்ப்பே ராசிரியர் நாகைமறை மலையடிகள் பண்பின் வந்த
நந்தலிலாக் குலவிளக்கு நங்கைமணி தமிழரசி நாவல் லோர்கள்
தந்தமுடன் பிறந்தனைய ரெனமதிக்கும் பொறையொழுக்கந் தகுதி
[வாய்ந்தாள்.

—ஈரோடு, சிவ. துப்புச்சாமிப் பிள்ளை

செந்தமிழ்க்கோர் தாயகமாம் செல்வி திரு நீலஅம்மை
பந்தமறுத் தின்றனடி பற்றினளே !—எந்தமது
அன்னை தமிழ்மொழிக்கிங் கியாரே புகலாவார்
பொன்னேர் சடிலாய் புகல் !

—தூத்துக்குடி, சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை.

ஏழா ண்டுகள் கழிந்தது மாங்களை
எழெட்டு மாதமாக் காணுக் குறையால்
ஊழி நோயுற ஊழ்த்துணை யேகினள்.

அருமை அண்ணியார் அருமை மக்களும்
பெருமைப் படவே பேணுதல் நுங்கடன்
திருவின் றுணையாற் றேர்தல் நலமே.

ஐப்பசித் திங்களை நான்கு நண்பகல்
மெய்ப்பதஞ் சார்ந்த மாதினி யாரின்
செய்கட ஞற்றுதல் சேய்களின் கடமையே.

நண்பர்கள் பலரையும் நீங்கிய பண்டிதை
பண்டிதர் தந்தையைப் பிரிந்த தெங்ஙனம்?
கண்டவர் கேட்டவர் கடுந்துயர் எய்தவே.

பூரணன் யானும் போற்றுது மீசனை
பாரணம் பண்ணுவ லம்பிகை நினைத்தே
காரணன் கிருபையுங் கைவரல் திண்ணமே.

—மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, B.A., L.T.

தமிழருந் தாய்மறந் தார்தமிழ்த் தாயும்தன் சேய் மறந்து
தமிழருந் தாய்இல ரோஎன நின்ற நிலை யிடையே
தமிழருந் தாய்அருந் தாய்என ஊட்டிய தமிழ ருந்தாய்
தமிழருந் தாய்இல ரேஎன நீத்தெமை ஏகி னளே !

விழுத்தகு மெய்த்தமிழ் நன்னிலை காட்டி அறநெறிக்கே
இழுத்தஅம் மெய்த்தவன் வண்டமிழ் ஏந்தல் மறைமலையின்
முழுத்தமிழ் ஆர்வம்மெய் உருப்பெற வந்துமூ வாத தமிழ்
பழுத்துரு காஅனை யாய்!பழி யேமைவிட் டேகி னையோ ?

உடற்பிறந் தார்எண்மர் சேயர்நின் றார்இவண் ; நின்ன றிவுக்
கடற்பிறந் தார்எண் ணிலாத வர்சேயர் நின்றார் ; இனும்பின்
னிடப்பிறந் தார்இளஞ் செல்வர்நின் றார் ; நின் நன்னூல் தொகுதிக்
கடற்புரந் தார்இவண் நின்றனர் ; என்கடந் தேகி னதே ?

செந்தமிழ் நந்தமி ழாக்கிய சேவகன் தந்தை முறை ;
வந்தமிழ் தாமதை வரையற எங்கும் வழங்கு புகழ்
நந்தமிழ் வள்ளல்நின் வாழ்துணை யாம்முறை ; நலிந்திங் கனே
நொந்தமிழ் வேமும்நின் சேய்முறை யோஎன நீத்த னையோ ?

கல்லா லொருமலை பல்லா வரமதன் புடை அறிவுச்
சொல்லா லொருமலை துன்னிய தென்ன இருந்த தவன்
நல்லா றதன்பய னாகிய நல்லா றெனஎழுந் தோய் !
தொல்லா றிது வெனக் காட்டுவ தாரினித் தோமறவே !

சீலக்கண் கொண் டோம் செந்தமிழின் செல்வ மெலாம்
ஞாலக்கண் காட்டிய மெய்ஞ் ஞானத் திருவு ருவே !
நீலக்கண் ணம் மே !நீ நீத்தனையேல் எம்மை இங்கே
மாலக்கண் நீக்கி எமை மகிழ்விப்பார் யாரி னியே !

முத்தையாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்
வித்துவான் கா. அப்பாதுரைப் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.

ஓம்

திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் அவர்களின் மறைவு குறித்து

அன்பர்களின் ஆறுதலுரைகள்

அருமைப் புதல்வன் திருநாவுக்கு,

நின்னருமைத் தமக்கை நீலாம்பாள் இறந்த செய்தி கேட்டு, யானும் நின் அன்னை தமையன் தங்கையும் மற்றையோரும் அனலிடை மெழுகாய் உருகி அராற்றினோம். பிறப்பை வகுத்த இறைவன் இறப்பையும் உடன் வகுத்தால் சிற்றுயிர்களாகிய யாம் என்செய்வதென்று கலங்கினோம். தாய் தந்தையரை ஒருங்கிழந்த நின் தமக்கையின் மக்கள் நிலைமையை நோக்கி நெஞ்சம் நீராய்க் கரைகின்றது. அவ்வுயிர்களைப் பிறவியிற் கொணர்ந்த இறைவனே அவர்களைக் காத்துப் பயன் படுத்தும். வீட்டிலுள்ளார் அனைவர்க்கும் எங்கள் ஆறுதல் மொழிகளைத் தெரிவி.

மறைமலையடிகளார்.

திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் சிவபெருமான் திருவடி நிழல் அடைந்த செய்தியறிந்து பெரிதும் வருத்தம் அடைகின்றேன். தமிழ்ப் புலமை சான்ற அவர்கள் அணிமையில் கணவனையிழந்த துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு தம் இளம் பிள்ளைகளுக்குத் துணையாக இருக்க வேண்டிய நிலையில் இங்ஙனம் மறைந்தது ஆற்றொணாத் துயரம் தருவதே! என் செய்யலாம்! ஊழ்வலி பெரிதன்றோ? எல்லோர்க்கும் இறைவன் ஆறுதல் அளிப்பாராக!

"தங்கள் மகள்" என்று குறிப்பிட்டு அன்பு பாராட்டி எனக்குக் கடிதம் எழுதிய அம்மையின் மறைவு குறித்த என் ஆழ்ந்த துயரத்தை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார், அண்ணாமலை நகர்.

திரு. நீலாம்பிகையின் பருவுடல் பிரிந்தமை கேட்டுத் திடுக்கிட்டேன்! அம்மையாரின் பிரிவு தங்கட்கும் தமிழ்நாட்டுக்கும் சைவ உலகுக்கும் பெருந் துன்பத்தை விளைத்துள்ளது! ஈடு செய்தல் அருமை. குழந்தைகட்கு ஆறுதல் கூறுக. தங்கட்குக் கடமை பெருகியது. எல்லாம் ஆண்டவன் செயல்.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார், சென்னை.

நீலாம்பிகை அம்மையார் அவர்கள் நல்ல பண்பாட்டில் பிறந்து வளர்ந்து தமிழுக்கு அரிய தொண்டு செய்தவர்கள். திருநெல்வேலிக்கு ஒரு அணிகலமாய் இருந்தார்கள். இப்போது மறைந்து விட்டார்கள். குழந்தைகளுக்கும், தங்களுக்கும், தந்தையாருக்கும் நேர்ந்த துயரத்துக்கு மாற்றுந்தான் உண்டா? எல்லாம் இறைவனது ஆணை என்று மனத்தைத் தேற்றிப் பார்க்கவேண்டியதைத் தவிர, வேறு என்னசெய்யக் கிடக்கிறது!

டி. கே. சிதம்பரநாத முதலியார், திருக்குற்றாலம்.

அம்மையார் சிவன் திருவடி நிழலை அடைந்தார் என்று அறிய மனம் வருந்துகிறேன். அவர் இதுவரை செய்துவந்த தமிழ்ப்பணி நின்றுவிட்டதே என்பதற்காக எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இல்லற மாண்புக்கும், மொழித்தொண்டிற்கும் அவர் காட்டிய வழியை நமது தமிழ்நாட்டுப் பெண்மணிகள் பின்பற்றினால் நமது நாடு வருங்காலத்தில் சிறப்புற்று ஓங்கி உயரும்.

டாக்டர், டி. எஸ். திருமூர்த்தி, நுங்கம்பாக்கம்.

திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் தவறிவிட்ட செய்தி கேட்டுத் திடுக்கிட்டேன். அவர் தமிழுலகிற்கும் பெண்மை யுலகிற்கும் ஆற்றியுள்ள தொண்டு மிகச் சிறப்புடைத்து.

டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார், அண்ணாமலை நகர்.

தனித்தமிழ் நூல்கள் பல இயற்றி, தனித்தமிழ் இலக்கியத்திற்கு ஆக்கம் அளித்த அம்மையாரன்றோ? இந்த அம்மையாரின் பிரிவால் தமிழ் உலகம் ஒரு சிறந்த எழுத்தாளரை இழந்தது.

பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், தாம்பரம்.

அம்மையார் பிரிவால் பெண்கள் உலகு தன் தோள் வலியை இழந்தது.

ச. சிவகாமி அம்மாள், தூத்துக்குடி.

தனித்தமிழ்க் கொண்டலின் நல்மரபாய் விளங்கிய அம்மையாரின் பிரிவு தமிழன்பர்களைத் திடுக்கிடச் செய்துவிட்டது. ஓர் ஒப்பற்ற தமிழ் மணியை—உயரிய சைவ மணியை—ஒரு நற்பெண்மணியை இழக்க நேர்ந்ததைப்பற்றிக் கவல்கின்றேன்.

பி. டி. எஸ். குமாரசாமி செட்டியார், கும்பகோணம்.

திரு. நீலாம்பிகை அம்மையார் அவர்கள் இறைவன் திருவடி நீழலடைந்தமையை நான் வெளியீடு வாயிலாக அறிந்தேன். என் உள்ளம் திடுக்கிட்டது. இனித் தனித்தமிழில் நூலெழுதும் ஆற்றலுடையார் யார்? இது தமிழன்னையின் தவக்குறையே!

D. N. ஆறுமுகம் பிள்ளை, "தமிழகம்", கோவை.

திருவாட்டி தி. நீலாம்பிகை அம்மையாரவர்கள் காலஞ்சென்றது பற்றி மிக்க வருத்தமடைகின்றேன்.

ராவ்பகதூர், டி. எம். சின்னையா பிள்ளை, தியாகராயநகர்.

தங்கள் அருமை அண்ணியார் இறைவன் திருவடி நீழலடைந்தமை குறித்த கடிதம் இன்று என் நெஞ்சைப் பிளந்துவிட்டது.......தனித்தமி ழியக்கத்தைத் தம் உயிர்ப்பாகக் கொண்ட தவத் திருவாட்டி நீலாம்பிகை அம்மையாரின் அரிய உயிர் இறைவன் திருவடியில் என்றும் அழியா இன்பம் எய்துக!

"பெருஞ்சொல் விளக்கனார்" அ. மு. சரவண முதலியார், பூவாளூர்.

திரு. நீலாம்பிகையம்மையார் சிவனடி யெய்திய துக்கச் செய்தி கேட்டு மிக்க வருந்தினேன். அவர்கள் பிரிவு தமிழுலகுக்குப் பெருந் துக்கம் தருவதாகும். எல்லாம் சிவனருள் என்றாற்றியிருத்தல் கடன். பிள்ளைகள் எண்மரின் நிலை பெருங்கவலைதான். சிவன் காப்பன். என் அநுதாபம் அனைவர்க்கும் வருகின்றது.

"சிவக்கவி மணி" சி. கே. சுப்பிரமணிய முதலியார், கோவை

நம் அருமைத் தமிழ்ச் செல்வியாராகிய திரு. தி. நீலாம்பிகை அம்மையார் தம் இளமக்கள் எண்மரையும், நம்மையும், தம் தமிழ்த் திருத் தொண்டையும் விடுத்து இறைவன் திருவடி நீழலடைந்த செய்தியை அறிந்து நானும் என் வீட்டாரும் ஆறாத் துயர் அடைந்துள்ளோம்.

அவர் ஆன்மாவிற்கு அமைதியையும், அவர் சிறுவர்க்குப் பாது காவலையும், நமக்கு ஆறுதலேயும் அளித்தருளத் திருவருளைச் சிந்திப்ப தன்றி நாம் என் செய்யவல்லோம்!

ச. த. சற்குணர், "தமிழகம்", தாம்பரம்.

திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் அவர்களின் பிரிவு நாட்டிற் குப் பெரிய நஷ்டம். அவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக் கிறேன்.

நா. ம. ரா. சுப்பராமன், எம்.எல்.ஸி., மதுரை.

தனித்தமிழ் அன்னையாரான திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் அவர்களின் இரங்குதற்குரிய மறைவு தெரிந்து உள்ளம் உன்னுதொறும் இன்னதென் றறியாததோர் உரிமை யுணர்ச்சியினால் இழுதாகின்றது. ஆசிரியர் மறைமலையடிகளிடத்தில் யானும் அவர்களும் உடன்பிறந்தாரை யொப்ப ஒருசாலை மாணவராய்ப் பழகினோம். அதனாலும், தனித்தமி ழுணர்ச்சியினாலும் யான் எனது வாழ்க்கையில் முதன்மையாய்த் தொடர்பு பெற்றிருந்த என் அலுவலகத்தின் இல்லத் தலைவியார் என்னும் மதிப் பாலும் இத்தகைய உரிமை யுணர்ச்சி எனதுள்ளத்தைக் கவர்ந்து நினை தொறும் உருக்குகின்றது. யானும் இதனால் ஆறுதல் காணாதே அலமரு கின்றேன்.......ஆற்றாமையுடையார் உரை எனை ஆற்றாமையுடையார்க்கு ஓர் ஆறுதல் அளிப்பது உண்மையாயின், அஃது அதனை அளிப்பதாக வென நினைக்கின்றேன்.

தமிழகத்தில் தனித்தமிழ் அன்னை, சைவத்தாய், பல நல்ல நூல்கள் இயற்றிப் பெருந்தொண்டு புரிந்த அருள் தலைவி, திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் ஒருவரே. அவரது வாழ்க்கையும் மறைவும் தமிழ் வரலாற்றிற்குரியவை. அவர்தங் கணவனார் வாழ்க்கையும் பிரிவும் அத்தகையனவே. அவ்விருவர்க்கும் ஒருமிக்க நினைவுக்குறிகளும் வரலாறுகளும் அமைப்பது இன்றியமையாதது.

"சிவநெறிச் செஞ்சொற்கொண்டல்" இளவழகனார், சென்னை.

அண்ணாரை இழந்து துன்புறுந் தாங்கள் அருந்தமிழ் அண்ணியாரை இழத்தல் கொடுமை! கொடுமை!! சொல்லாழம் துன்பத்தி னாழத்தைச் சொல்லும் திறத்ததன்று. உடலைப் பிரிந்த ஆவி அமைதியுறுக!

வித்துவான் மு. இராசாக்கண்ணு, B.O.L., குடந்தை.

தங்கை தி. நீலாம்பிகை அம்மையின் பிரிவு கேட்டு ஆற்றொணாத் துன்பம் அடைந்தேன். வாழ்க்கைத் துணை நலத்துக்கு அவ்வம்மை ஓர் எடுத்துக்காட்டு. நம் தமிழுக்குச் செய்துள்ள பணிகளோ என்றும் மறவாமற் போற்றற்குரியன. தங்கை நீலாம்பிகையால் நம் தமிழ்நாடு மிகப் பெரிய நலன்களையெல்லாம் பெற்றுச் சிறக்கும் என்று எண்ணியிருந்தேன். ஏமாற்றம் உற்றேன்! இறையருள் என்னே!...எட்டுக்குழந்தைகளும் நம் தமிழ்நாட்டின் எட்டுப்பக்கங்களிலும் சென்று தமிழ் வளர்த்துச் சைவம் ஓம்பி அறநெறி பலவும் அமைவுறச்செய்து பேரும் புகழும் எடுக்க இறையடி போற்றுகிறேன்.

மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார், சென்னை.

அண்ணியார் சிவபதம் அடைந்தார்கள் என்ற கடிதம் பார்த்ததும் அதிக மனவேதனை அடைந்தேன். 'நாற்பது வயதுக்குமேல் காசநோய் பற்றிய காய்ச்சல் வந்தால் கொல்லாது' என்பது எங்கள் நாட்டுப் பழக்கம். அதை எண்ணி மனத்தைரியமாக இருந்தேன். நாம் நினைப்பதுபோல் எது நடக்கிறது? எல்லாம் சிவன் செயல்.

வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார், பாகனேரி.

தனித்தமிழ் இயக்கங்கண்டு செந்தமிழ் உரைநடை நூல்கள் பல இயற்றியவராகிய நீலாம்பிகையம்மையார் மறைவுக்கு நாம் மாத்திரமோ, தமிழுலகமே கண்ணீர் வடிக்கின்றதே!

சாலவருந்தும் சகதேவ முதலியார், சேலை.

அம்மையாரின் நூல்கள் தமிழர்க்கு எவ்வளவோ பயன்தந்து வருகின்றன. தமிழ் வளர்த்த தக்காரிருவரைத் தமிழ்நாடு இழந்துவிட்டது.

நா. நாராயணன் செட்டியார், நேமத்தான்பட்டி.

நீலாம்பாள் பிரிவு ஆற்றுதற்குரியதாக இல்லையே! என்செய்யலாம்!

"அடுக்கி வரினும் அழிவிலா னுற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

என்னும் திருமொழியைப் பின்பற்றி ஆறுதலுடன் இருக்கவேண்டியது தான்!

சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை, தூத்துக்குடி.

திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் மறைவுபற்றி அறிந்து வருத்த மெய்துகிறேன். அருமைத் தாயைப் பிரிந்த மக்களுக்கு இறைவன் ஆறுதல் அளிப்பானாக! தமிழ்நாடு அம்மையார் தமிழ்த்தொண்டை என்னான்றும் மறவாது. அம்மையார் புகழ் ஒருநாளும் அழியாது. அவர்கள் தோற்றுவித்த தனித்தமிழ்க் கிளர்ச்சியும் மறையாது. ஆண்டவனே நம் துயர் தீர்ப்பானாக!

ரெவரண்ட் ஆ. அருள் தங்கையா, பூவிருந்தவல்லி.

திருவாட்டி தி. நீலாம்பிகை அம்மையார் பிரிவினால் தாங்கள் தங்கள் அண்ணியாரை இழந்தீர்கள்; தமிழன்னை கடமையறிந்து பணிசெய்யும் ஓர் அருமை மகளை இழந்தாள்; தமிழர்கள் ஒரு வீரத் தமிழ் அம்மையாரை இழந்தனர்; சமூகம் ஒரு கற்புடைய நங்கையை இழந்தது; இலக்கிய உலகம் ஒரு சிறந்த ஆசிரியரை இழந்தது. எனவே, தங்கள் இழப்பில் எல்லோருக்கும் பங்குண்டு.

சே. முத்துவீராசாமி, காவேரிப்பாக்கம்.

நீலாம்பிகை அம்மையார் சிவனுலகடைந்த செய்திகேட்டு மிகவும் திடுக்கிட்டேன். அவ் வாறாத் துயர் எவ்வகையாலும் மாற்றுதற் கியலாத தொன்றே!

"குடும்பபாரம் தாங்கு பவர்க்கு அல்லால்
விடும்பரி சின்மை யென் றுந்தீபற!"

என்னும் மேலோர் வாக்குப்படி தங்களுக்குப் பல பொறுப்புகளும் வந்து குவிந்து கொண்டன.

புகழ். முத்துசாமிப் பிள்ளை, உடன்குடி.

தமிழ்த் தாயார் உயர் திருவாட்டியார் தி. நீலாம்பிகை அம்மையார் அவர்கள் சிவனடிக் கமலம் அடைந்ததை அறிய, நானும் எனது குடும்பத்தினரும் பெரும் வருத்த மெய்தினோம். அம்மையார் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய இணையிலாத் தொண்டுகளை நினைக்க எந்தத் தமிழன் தான் வருந்தான்?

கே. ஆறுமுக நாவலர், நாகர்கோவில்.

நம் தமிழன்னை திரு. நீலாம்பிகை அம்மையாரவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறேன். அம்மையாரின் பிரிவு தமிழர்கட்கு ஒரு பெரும் நஷ்டமாகும்!

மு. சாத்தப்பச் செட்டியார், பாகனேரி.

திரு. நீலாம்பிகை அம்மையார் பிரிவு, குடும்பம், கழகம், மொழி அனைத்திற்கும் ஈடு செய்ய இயலா இழப்பாகும்! துன்பம்! துன்பம்!!

என் மனம் குடும்பத்தை—அருமை மக்களை—நினைந்தே பெரிதும் வருந்துகின்றது. செந்தமிழ்த் தேனும் செல்வப் பண்பாடும் ஒருங்கே குழைத்து ஊட்டிய அருமை அன்னையார் பிரிந்தபின் அந்த அன்புருவாம் குழந்தைகள் ஏங்கும் ஏக்கமே என்னைப் பெரிதும் கலக்குகின்றது. இறைவன் துணை.

வித்துவான் மு. வரதராசன், எம்.ஓ.எல்., சென்னை.

நம்பவொண்ணுச் செய்தியொன்று கேட்டு மனம் நைகின்றேன். தாயிற் சிறந்த தகவுடைய அம்மையார் மறைந்தனரா? தமிழறிவுக் களஞ்சியம் கொள்ளைபோயிற்ரு? பெண்கள் குலவிளக்கு அணைந்து விட்டதா? செந்தமிழிற் பேசி எழுதி இனிமை புகட்டிய அம்மையாரின் வாழ்வுக்கும் அழிவு நேர்ந்ததா? ஈடு செய்ய வொண்ணுத இழப்படைந் தாள் தமிழன்னை! பேணித் தமிழறியும் பெருமாட்டி நீலாம்பிகையின் பிரிவுத் தீ எளிதில் ஆறக் கூடியதல்ல!

தந்தையோ டன்றித் தாயையும் பிரிந்து தவிக்கும் தமிழ்க் குழந்தை களும், தமக்கையின் பிரிவால் வாடும் தம்பியரும், தாங்களும் ஆச்சியும் இனி எவ்வகையில் ஆறுதல் அடைய முடியும்? நிலைபெற்று வாழ்கின்ற அமரத்துவம் பெற்றுள்ள அம்மையாரது இனிய நூல்களின் வளத்தையும் காலச் சுழலின் வேகத்தையும் கருதி அமைதியுறுவதைத் தவிர, வேறு நாம் யாது செய்ய வல்லோம்!

புத்தனேரி, ரா. சுப்பிரமணியன், சென்னை.

தங்கள் அருமை அண்ணியாரவர்கள் காலமானது தெரிந்து மிகுந்த மனவருத்தமடைகின்றேன். தங்கள் குடும்பத்தாருக்கும் மறைமலை அடிகள் குடும்பத்தாருக்கும் ஆறுதல் அருளும் வண்ணம் இறைவனை வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

ராவ்சாகிப், வே. ப. சுப்பிரமணிய முதலியார், வெள்ளக்கால்.

வயது முதிராச் சிறுவர்களை விட்டுவிட்டு இறைவன் திருவடி யடைந் தனரே! இனி அச் சிறுவர்கள் பேறின்மைதான் என்னே! எனினும் துன்பம் அடுத்தடுத்து வரினும் பொறுத்தல் நம் கடன்.

தூ. சு. கந்தசாமி முதலியார், வழக்குரைஞர், சாத்தூர்.

திருமதி. தி. நீலாம்பிகை அம்மையார் அவர்கள் இயற்கை யெய்தி யதைக் கேள்வியுற்று அளவற்ற துயரடைந்தோம். இயற்கையை உணர்ந்த தங்களுக்கு எவ்வித ஆறுதலும் தேவையில்லை. இருப்பினும் எமது ஆழ்ந்த அநுதாபம் உரித்தாகுக!

ஈ. வே. இராமசாமி நாயக்கர், ஈரோடு.

திரு. நீலாம்பிகை அம்மாள் இறைவன் திருவடி நிழல் அடைந்தார் என்றதைக் கேட்டதும், வான் இடித்ததுபோல் என் நெஞ்சைப் பிளந் தது! அந்த அம்மையாரின் பிரிவாற்ருமையை எழுதுவதற்குக்கூட முடியவில்லை!

வே. ஏ. நடேச செட்டியார், ஆரணி.

தமிழணங்கைப் போற்றி வந்த செவிலித்தாய் அன்ன அம்மையார் தமது புகழுடம்பைச் செந்தமிழகத்திருத்தித் தமது நாயகரைத் தேடி இத்துணை விரைவிற் செல்வர் என யாரே நினைத்திருப்பார்! அஃது அவ்வம்மையாரின் நாயக பத்தியையும் திருவருளின் சத்தியையும் புலப் படுத்துகின்றது. இவ் வுண்மை தெரிந்து நாம் ஆறுதல் அடைய

வேண்டும். எங்கள் ஆசான் திரு. மறைமலையடிகள் இந் நிகழ்ச்சியைப் பற்றி உளச் சோர்வு பாராட்டாதிருக்கத் திருவருளை வேண்டுகின்றேன்.

இராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A., சென்னை.

திரு. தி. நீ. அம்மையார் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்த செய்தியை அறிந்து திடுக்கிட்டேன். தங்கட்கு அடிக்கடி நேரிடும் துன்ப நிகழ்ச்சிகளையும், குழந்தைகள் இளம் வயதில் அடைந்துள்ள ஏமாற்றத்தையும் எண்ணும்போது மனம் மிக்க வேதனையை அடைகிறது. என் செய்வது?

கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.

நீலாம்பிகை அம்மையாரவர்கள் இறையடி நீழலெய்திய செய்தியறிந்து மிக மிக வருந்துகிறேன். அம்மையாரவர்கள் இன்னும் பல தமிழ் நூல்களை எழுதி வெளியிடுவார்களென எதிர்பார்த்த தமிழுலகம் ஏமாற்றமடைந்தது. ஊழின் இயல்பை எண்ணி ஆறுதல் அடைய வேண்டுகிறேன்.

பண்டித வித்வான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
அண்ணாமலைநகர்.

திருவாட்டி தி. நீலாம்பிகை அம்மையார் இத்துணை இளவயதில் இறைவன் திருவடி நீழலடைந்தமை கேட்டுத் தமிழ்நாடு தவிப்படைகின்றது. தமிழ்த்தாய் தன் கண்போன்ற அருமணியை இழந்து வாடுகின்றாள்.

சாமி. வேலாயுதம் பிள்ளை, B.A., L.T., தலைமை ஆசிரியர், பாவநாசம்.

மக்களைத் தாய் தந்தையற்ற நிலையில் ஆக்கித், தமிழையும் நம்மையும் தயங்கவிட்டு, எல்லாப் பொறுப்பும் உங்களுக்கே காட்டிச் சென்ற துயரை மறக்கவோ மாற்றவோ முடியவில்லை.

பண்டிதை அ. நாராயணியம்மையார், சென்னை.

தனித்தமிழில் பல இனிய நூல்களியற்றிய அம்மையாரின் பிரிவை எண்ணுந்தொறும் மனம் அளவிலா வருத்தமடைகின்றது.

டி. எஸ். ஜி. வரதராஜலு, ஆர்க்காடு.

தங்கள் அருமைத் தமையனார் பிரிந்த குடும்பப் பெரும் பாரத்தை ஒருசார் தாங்கிநின்ற தங்கள் அண்ணியாரும் அப் பெறற்கரிய பெரும் பாரத்தைத் தங்கள்பாலே சார்த்திவிட்டு இவ்வுலக வாழ்வை நீத்த செய்தி அறிந்து ஆறாத் துயரடைகின்றேன்.

ஆ. மாணிக்கம், சேலம்.

தங்களுடைய அண்ணியார் அவர்களது மறைவைப்பற்றிய விளம்பரத்தைத் தினசரியிற் கண்டு சொல்லொணாத் துயரம் அடைந்தேன். பதினைந்து ஆண்டுகட்குட்பட்ட இளஞ் சிறுவர் சிறுமியர் எண்மரை

விட்டுச் சென்றார்கள் என்று தாங்கள் அனுப்பிய செய்தி அத்துயரத்தைப் பன்மடங் காக்கியது. தங்கள் தமையனார் மறைவினு லேற்பட்ட விசனம் மாறுமுன் இவ்வாறு நிகழ்ந்தது வெந்த புண்ணில் வேல் நுழைந்ததை ஒத்துளது. பெரும்புலமை வாய்ந்த ஆடவரையும் மகளிரையும் யமன் இவ்வாறு நியாயமின்றிக் கொண்டு சென்றுவிட்டால் தமிழுலகத்துக்கு என்ன நன்மை விளையக்கூடும்! எல்லாம் எம்பிரான் செயல்.

செல்வி. இராசாமணி அம்மையார், M.A., L.T., மயிலை.

தங்களுடைய அச்சுக் கார்டை வாசித்ததும், மனம் வருத்தமடைந்தது. ஆண்டவன் அவர்களுடைய ஆன்மாவுக்கு நல்ல நிலையைக் கொடுக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

வி. எஸ். லோகநாதன், மதுரை.

தனித்தமி ழியக்கத்திற்குத் தனித் திருத்தொண்டு புரிந்த அம்மையாரன்றோ அவர்கள்? செந்தமிழன்னைபால் சிறந்த பற்றுக்கொண்டு தமிழ் மக்கள் தண்டமிழ்ப் பயிற்சி பெறுதற்கு உதவியாயிருக்க உயர்ந்த நூல்களையும் இயற்றிய உயர்தவச் செல்வியார் நம்மை விட்டுப் பிரிந்தார்கள் என்ற செய்தி பெரும்பாலாருக்கும் துன்பத்தை விளைத்திருக்கும் என எண்ணுகின்றேன்.

நா. ப. தணிகையரசு, வாலாஜாபாத்.

தமிழ் நாட்டுத் தனிப்பெருஞ் செல்வியார் மறைந்த செய்தி யறிந்து திடுக்கிட்டேன். அன்னாரின் மறைவு தமிழர்க்கே ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். புராணங்களிலே படித்தோம் ஒளவையாரையும் மங்கையர்க்கரசியாரையும் மற்றும் பல பெண் திலகங்களையும். நேரில் கண்டு மகிழ நம் அம்மையார் இருந்தார்கள். அவர்களின் பிரிவு தமிழர் அனைவருக்கும் பெருங் கலக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சிபுரம்.

தமிழ்த் தொண்டு செய்யும் பெண்மணிகள் தமிழ்நாட்டில் மிகச் சிலரே. அவர்களுள் சிறப்பான தொண்டு புரிந்து தம் வாழ்வைத் தமிழ் வாழ்வாகப் பண்ணிய திருவாட்டி நீலாம்பிகையம்மையார் இன்னும் பல தொண்டுகளைச் செய்யக்கூடியவர். அதற்கு இடமின்றி இறைவன் தன் இணையடியிலே சேர்த்துக்கொண்டது திருவருள்போலும்!

"நன்றே செய்வாய் பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகனே" என்ற மணிவாசகப்பெருமான் அரிய வாக்கை நாமும் கிளிப்பிள்ளையைப் போலச் சொல்லி ஆறுதலடைவதை யன்றிச் செய்வது வேறு யாதுளது?

கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர், "கலைமகள்"

சகிக்க முடியாத துன்பச் செய்தியைத் தினமணியில் கண்டேன். துடிதுடித்தேன். ஒன்றும் எண்ணவே முடியாத நிலையை அடைந்தேன்! ஆறு பெண் குழந்தைகள் எப்படி அலறித் துடித்து அழுகின்றனவோ! "பட்ட காலிலே படும்! கெட்ட குடியே கெடும்!" என்னும் பழமொழிக்கு நாம்தானே எடுத்துக்காட்டாக இருக்கின்றோம்.

நேற்றுக் காலையில்தான் (அம்மையார் எழுதிய) எலிசபெத் பிரை பெருமாட்டியார் புத்தகத்தை முழுவதும் படித்தேன்! காலை எட்டரை மணிக்கு எடுத்து பத்தேகால் மணிக்கு முடித்தேன். செந்தமிழ் நடை அடியேனை இழுத்துக்கொண்டே போய்விட்டது! இன்று அவர்களுக்குத் தனிப்பட ஒரு பாராட்டுக் கடிதம் எழுத எண்ணினேன்! அக் கடிதம் வேறு வகையாக (துன்பக் கடிதமாக) எழுத நேர்ந்தது! உலக அதிசயங்களில் இதுவும் ஒன்று என்று அடியேன் எண்ணுகிறேன்.

வா. தி. மாசிலாமணி முதலியார், இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்.

மறைந்த அம்மையார் எனக்கும் பெண்களின் இலட்சிய உருவமாக இருந்து வந்தனர். கல்வியும் ஆற்றலும் அன்பும் ஒருங்கே கொண்ட அன்னார் என் உறவினரில் ஒருவராக அமைந்தது எனக்குப் பெருமையாக இருந்தது. அத்தகையவரை இழந்துவிட்டேன்.

மு. வீரபாது, B.A, சென்னை.

எதிர்பாராத செய்தி இன்று வந்து எங்களையெல்லாம் துயர்க்கடலில் வீழ்த்தியது! அறனும் அன்பும் அமைந்த அம்மையாருக்கும் இவ்வாறு நேரிட வேண்டுமோ? நம் மங்கையர்கட்கு ஒரு நன்மாதிரியாக இருந்தார்கள். கொடுங்கூற்றம் அவர்களை நம்மவர்களிடமிருந்து பிரித்தது. நினைக்குந்தோறும் வயிறு பகீர் என்கிறது!

திரு. சிவசைலம் பிள்ளை, M.A., L.T., சென்னை.

அன்பே உயிராய், அருளே யாக்கையாய் விளங்கிய அம்மணி, கூரிய அறிவும் சீரிய கல்விப்பயிற்சியும் பெற்று, தனித்தமிழ் உணர்ச்சியையும் சமய வுணர்ச்சியையும் தமிழ் நாடெங்கும் பரப்புதற்கு முன்வந்த அம்மையார் மறைவு தமிழ்நாடு செய்த தவக்குறைவே!

மா. சரோஜினி, சேத்துப்பட்டு.

இன்று பத்திரிகையில் நம் அருமை நீலாம்பிகையின் பிரிவைப் பார்த்து மனம் திடுக்கிட்டேன். சகிக்க முடியாத துன்பம்! ஆறாத் துயரம்!

டாக்டர் எஸ். தருமாம்பாள், சென்னை.

திருவருட்செயல் இப்படியுமிருக்குமோ என்று சிந்திக்கும்படியாய் இருக்கிறது.

ராவ்பகதூர், டாக்டர் தி. அண்ணாமலைப் பிள்ளை, தென்காசி.

தங்கள் அண்ணியார் அவர்கள் காலஞ்சென்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகின்றேன். செந்தமிழ்த் தொண்டில் முழுக்கருத்தும் செலுத்திவந்த தங்கட்கு நேர்ந்துள்ள இந்தத் துயர் தங்கட்கு மட்டுமன்றி தமிழர் யாவர்க்குமே நேர்ந்த தொன்றாகும்.

அ. கணபதி, கருந்திட்டைக்குடி.

தமிழ்த்தாயின் தவப்புதல்வி எங்கள் தாய் இவ்வுலக வாழ்வை வெறுத்ததைக் கண்டு மிகவும் வருந்துகிறேன்.

ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை, சிவன்கோயில் செயல் அதிகாரி,
தூத்துக்குடி.

தமிழன்னை தன்னரிய மக்களில் ஒருவரை இழந்தாள். தமிழுலகம் ஈடுபெறு நட்டத்தை அடைகின்றது.

நாகை N. முருகேசம் பிள்ளை, சென்னை.

செந்தமிழ் மொழியின் சிறப்பினைக் கண்டு அதன்வழி ஏகி, அறிவினில் பெருகி, தமிழன்னையின் அமுதினை உண்ட அருந்தவப் பிறப்பின் உருவே........இறைவனடி சேர்ந்தமையைக் கண்டு மனம் உருகி ஆற்றொணுத் துயருற்றேன். அவர்களது திருப்பெயரும், பெரும் ஆற்றலும் வாழி.

சு. திருஞானம், மதுரை.

மிகவும் வருத்தமடைகின்றேன். என் மனமுருகிய துக்கத்தை இதில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மு. மா. கோபாலகிருஷ்ணக்கோன், மதுரை.

திடுக்குற்றேன். தமிழ்நாடு ஒரு சிறந்த மணியை இழந்துவிட்டது. அம்மையாரின் பிரிவு பொதுவாகத் தமிழ் உலகுக்கும், சிறப்பாகச் சைவ உலகுக்கும் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பு ஆகும்.

வித்துவான் அன்பு கணபதி, பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

அம்மையார் இன்னுயிர் என்றும் இறவாத இன்பநிலையை இறையடியடைந்து எய்துவதாக.

வை. துஞ்சிதபாதம், சென்னை.

தன்னுயிர் கொண்டு தன் கணவன் இன்னுயிர் தேடிச் சென்ற தங்கள் அண்ணியாரின் பிரிவு தமிழ் நாட்டிற்கு ஒரு பெரிய இழப்பினைத் தருகின்றது.

வித்துவான், வீ. உலகவூழியன், திருச்செங்கோடு.

திருவரங்கம் பிள்ளை அவர்களின் மறைவால் உண்டான வருத்தம் இன்னும் நீங்கவில்லை. அதற்குள் அம்மையார் மறைவு ஏற்பட்டுவிட்டது. தனித்தமிழ் வளர்ச்சிக்கு அம்மையாருக்கு அப்பால் விரல் மடக்கப் பெண்கள் இல்லை.

வித்துவான், வி. சிவக்கொழுந்து, பெரியகுளம்.

இங்கு எல்லோரும் மிக்க வருந்துகின்றோம்.

கலைமகள் கல்லூரி, அம்மையப்பச் செட்டியார், கொப்பணம்பட்டி.

அம்மை நீலாம்பிகையார் பிரிவால் தாங்கொணுத் துன்பத்தைத் தமிழ் ஞாலம் இன்று காண்கின்றன.

கரந்தை. சிவ. துப்புசாமிப் பிள்ளை, ஈரோடு.

அவர்களுடைய வாழ்க்கையும் குறிக்கோளும் மகளிர்க்கன்றி எல்லோர்க்குமே எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன ; யாவரும் பின்பற்றுவார்களாக !

சி. வேதாசலம், B.A., B.L., மதுரை.

தமிழ்மொழி தனித்தியங்கும் வழி கண்டு காட்டியும், அருமை உரைநடை நூல்கள் இயற்றியும், சைவத்தையும் தமிழையும் வளர்த்த மங்கையர்க்கரசியின் அவதாரம்போல்வாரும், உலகறிந்த தமிழ்த் தலைவர் திரு. மறைமலையடிகளார் செல்வத் திருமகளாரும் ஆகிய நீலாம்பிகையம்மையார் மண்ணக நீத்த செய்தி கேட்டு வருந்துகின்றேன். இளமை நீங்கா எண்மர் மக்களின் பரிதாபநிலை நினைக்கும் நெஞ்சை ஈருந்தகையது. இறைவன் அம்மையாருக்கு காரைக்காலம்மைபோல் காட்சி தந்து திருவடி நீழலளிப்பார். இறைவன் பேரருள் இக் குடும்பத்தினர்க்கு ஆறுதல் அளிப்பதாக !

புலவரேறு, அ. வரத நஞ்சைய பிள்ளை, தோரமங்கலம்.

தமிழ்த்தாயின் தவப்புதல்வியும் அறப்பண்பு மிக்க அன்னையும் ஆகிய திருவாட்டி நீலாம்பிகையம்மையாரது பிரிவு, பொதுவாக தமிழுலகிற்கும் சிறப்பாகப் பெண்ணுலகிற்கும் பெரிய நஷ்டத்தை உண்டுபண்ணி விட்டது. அவர்கள் தமிழுக்குப் புரிந்த தொண்டை தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

கிருபானந்தவாரி, ஆசிரியர், "திருப்புகழ் அமிர்தம்."

இளஞ் சிறுவர் எண்மரை விடுத்துத் தந்தை தாயிருவரும் ஒருவர் பின் ஒருவராக மேலுலகஞ் சென்றதை எண்ணி மிக வருந்தினேன்.

வித்துவான் வே. வெங்கடராஜலு, சென்னைப் பல்கலைக் கழகம்.

தங்கள் கடிதங் கண்டு திடுக்கிட்டேன். தமிழ்த்தாயின் தவப்புதல்வியாராகிய தங்கள் அருமை அண்ணியார் காலஞ்சென்றமை நம் தமிழகத்திற்கே பெருந் துன்பந்தரும் கொடிய நிகழ்ச்சியாகும். என் செய்வது ! அவர்கள் பிரிவால் ஏற்பட்ட துன்பம் அளத்தற்கரியது.

T. V. சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலை நகர்.

அருமை அண்ணியார், தனித்தமிழ் அரசியார் 'உலா நூல்' இயம்பக் கைலைக்கு அழைக்கப்பட்டனர்போலும்.

ச. முத்துக்குமாரசாமிப் பிள்ளை, திருச்செந்தூர்.

தங்கள் நாயகன்பால் தலையன்பு பூண்டிருந்த அம்மையார் இதுவரை உடலில் உயிர்தரித்து நின்றதே தங்கள் அருமைக் குழந்தைகளிடம் கொண்ட பேரன்பினாலேயே. குழந்தைகள் பணியை ஒரு சிறிது நிறைவேற்றுவதற்கு முன்பே அவர்களை அழைத்துக்கொண்ட இறைவனின் திருவுள்ளத்தை யாரே அறியவல்லார் !

நாங்களே இவ்வாறு கலங்கும்போது அவ்விடம் உங்கள் நிலை என்னவாக இருக்கும். நாங்கள் என்னவென்று ஆறுதல் கூறமுடியும். எல்லாம்

வல்ல சிவபெருமானே இந்தத் துன்ப வேளையில் உங்களுக்கு ஆறுதல் அளிக்கவேண்டுமென்றும், ஈன்றோரும் தந்தையுமாக இருந்து குழந்தைகளைக் கவனிக்க உங்களுக்குத் தகுந்த ஆற்றலைக் கொடுக்கவேண்டுமென்றும் அவனுடைய திருவடிகளை இறைஞ்சி வேண்டிக்கொள்கிறோம்.

நீலாம்பிகை அம்மையார் இறந்தா போனார்கள்? இல்லை. காலன் அவர்கள் வெற்றுடம்பை அல்லவா கொண்டு ஏகினான்! அவர்கள் புகழுடம்பு தமிழ் நாட்டில் என்றும் மலைமேல் விளக்குப்போல் பொன்றாப் புகழுடன் விளங்கும். தாய் நாட்டிற்கும், பெண்கள் சமூகத்திற்கும் தீந்தமிழ் வாயிலாக அவர்கள் செய்த தொண்டு என்றும் அவர்களை நம்முடன் வாழும்படி செய்துவிட்டது. அவர்கள் இயற்றிய அற்புதமான தனித்தமிழ் நூல்கள் (இன்றும் வெளிவர வேண்டியவைகள் உட்பட) அவர்களைத் தமிழர்கள் யாவருக்கும் சொந்தமாக்கிவிட்டன.

சைவப்பணி, தமிழ்ப் பணி செய்யத் துடிதுடித்துக் கொண்டிருந்த அவர்கள் ஆருயிர் அமைதி பெறுவதாக.

S. நடராஜ நாடார், B.A., B.L., ஜில்லா முன்சீப், திருமங்கலம்.

பல்கலைக் குரிசில் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை முதலான பேறிஞர்களால் நன்கு மதித்துப் போற்றப் பெற்றவரும், ஈரோடு. வே. இராமசாமியார் அவர்கட்குப் 'பெரியார்' என்ற பீடுறு பெயரைப் பேரன்போடும் தன்மதிப்போடும் வழங்கியவரும், சென்னை நார்த்விக் பெண்மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய் இலங்கியவரும், தமிழகத்தில் தனித்தமிழ் மக்களிடத்தில் தனித்தமிழ் வெறியையும் பற்றையும் உண்டாக்கியவரும், தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து இனிக்கும் செவ்விய தனித்தமிழ்ச் செந்தமிழ் நடையில் 'தனித்தமிழ்க் கட்டுரை', 'முப்பெண்மணிகள் வரலாறு', 'சோன் வரலாறு,' 'வடசொற்றமிழ் அகர வரிசை' முதலான தனிச் செந்தமிழ் நூல்களின் கணக்காயரும், கோப்பெண்டு ஔவையார் முதலான சங்க காலப் பெண்பாற் புலவர்களைப்போன்ற அறிவாற்றலும், செந்தமிழ்த் திறனும் மனைமாட்சியும் ஒருங்கே உடையவரும், குழலினும் யாழினும் இனிய தமது குயிற்குரலால் ஆன்றவிந்து அடங்கிய ஆன்றோரின் இன்றமிழ்ச் செய்யுட்களைப் பாடி அம்மையப்பரைப் போற்றும் அருமையரும், உளத்தாலும் உரையாலும் செயலாலும் நற்றமிழிற்கு நற்றொண்டு புரிந்த நங்கையும், தமிழ்த் தகைமையெல்லாம் ஒருருவாய்த் திரண்டு தமிழகத்தில்—தமிழரினத்தில் இருபதாம் நூற்றாண்டில் பெரும் புலமையுடன் மிளிர்ந்த பெருமாட்டியும், உலக மக்கட்கு எடுத்துக்காட்டாக விளங்கியவரும், நினைக்க நினைக்க உணர உணர உள்ளத்தை நெய்யாய் உருக வைக்கும் இயல்புகளும் மொழியும் தொண்டும் உடைய உயர்பெரும் அம்மையும் ஆகிய செந்தமிழ்ச் செல்வியார் திரு. திருவரங்க-நீலாம்பிகை அம்மையாரவர்கள் பிரிவு தெரிந்து யானும் உளம் வீங்கி உறுங் கவல்கொண்டு இடுக்கணுற்றேன்; கண்ணீருங் கம்பலையுங் கொண்டேன்.

வித்துவான், வை. பொன்னம்பலனார், வேலூர், (சேலம்).

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தந்தையார் சென்ற விடத்தைத் தேடித் தனித்தமிழியக்கத் தாயார் சென்றார்போலும்!

லா. கோ. சுந்தரராஜலு, குளித்தலை.

தமிழன்னை தன் தொண்டிற்குரிய தோழியருள் ஒருவரை யிழந்தாள்; உரை நடை யுலகம் தன் வளர்ச்சிக்குத் துணை செய்யும் தையல் நல்லாரை யிழந்தது; விருந்தினராய்ச் செல்லும் எம்மனோர் தம்மை யேற்றுப் புறந்தருவாரை யிழந்தனர். தாங்கள் உடன்பிறந்த அண்ணனை யிழந்த இழப்பு மறப்பதற்கு முன் அண்ணியாரை யிழந்து வருந்துகின்றீர்கள். அவர்கள் மக்கள் பெற்ற தாயை இழந்து பேதுறுகின்றனர். இதுகண்டு வருந்தும் அறிஞர் உலகம்.

வித்துவான், ஒளவை. சு. துரைசாமி பிள்ளை, அண்ணாமலைநகர்.

விதியொன்றைத் தடுக்க எவராலும் முடியாதென்பதைத் தாங்கள் நன்கு அறிந்தவர்களாகலான் துன்பத்தை மறந்து குழந்தைகளுக்கு ஆறுதல் கூறி வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சி. உ. சுப. உடையப்பன், பாகனேரி.

பெண்கள் குழுவிற்கு ஓர் பேர் அன்னையாய்த் திகழ்ந்த தங்கள் அண்ணியார் நீலாம்பிகை அம்மையாருடைய ஆருயிர் இறைவன் திருவடி நீழலில் அமைதியுற்றிருக்கத் திருவருளை வழுத்துகின்றேன்.

துடிசைகிழார் அ. சிதம்பர முதலியார், கோயம்புத்தூர்.

பெண்பால் உயர்வை நிலைக்கப் பாடுபட்டு வந்த அவர்கள் செய்கையும் போற்றத்தக்கதே.

குழந்தைவேல் பிள்ளை, கிளாக்குளம்.

தங்கள் தமையனாரவர்களின் அருமைத் துணைவியாரின் பிரிவு தெரிந்து வருத்தமுற்றேன்.

S. கலியாணசுந்தரம் அய்யர், B.A., சென்னை.

எங்களுக்கு மிக்க துயரம் உண்டாயிற்று.

அ. சோமசுந்தரம், M.A., ராயபுரம்.

எண்மரை விடுத்துச் சென்ற செய்தி துக்கத்தில் ஆழ்த்துகிறது. தமிழகத்திற்கும் நஷ்டம்.

சி. பாலசுப்பிரமணியம், பென்னலூர்.

தம் அருமைக் கணவனாரைப் பிரிந்த துயரமே அம்மையார் ஆருயிரை அலைத்து வந்திருக்கிறது. மக்களைக் காப்பாற்றவேண்டும் கடமையுணர்ச்சியால் தளரு மேனியைத் தைரியத்துடன் தாங்கிக் கடனாற்றி வந்தார்கள். அந்தோ! அறிவுக்களஞ்சியமாயும், அருந்தமிழ்க் கணிகலமாயும், தமிழ்ப் பெண்கட்கோர் தனிப்பெருந் தலைவியாயும், ஒழுக்கச் சுடற்கொழுந்தாயும் விளங்கிய இவ்வம்மை நரைமூதாட்டியாய், இக்கால் ஒளவையார் எனப் பன்னெடுங்காலம் இம் மண்மிசை வாழ்ந்து மக்களை

மாண்புறச் செய்வார்கள் என்று நினைத்திருந்தேனே! மறைந்து விட்டார்களே! கந்தர் சஷ்டி விரத காலத்தில் இவ் வரும்பெரு மகளைத் தன் னுலகிற் கழைத்துக்கொண்டான் கந்தன். ஏன் அவன் அது செய்தான்? யாரறிவார்? அவ் வம்மையின் ஆருயிர்க்கு ஆறுமுகமுடையான் ஆறுதலை யளிப்பானாக!

ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T., வேலூர்.

செந்தமிழ் நாடு தன் உயிர் அன்னையை இழந்துவிட்டது. கற்புக் கரசி, செந்தமிழ்ச் செல்வி, என் அருமைத் தோழி காரைக்கால் அம்மையைப்போல் இறைவன் திருக்கரத்தைப் பார்த்துக்கொண்டு இருப்பாள். நாம் அவளைப் பிரிந்து வருந்துகிறோம்.

ஆண்டாளம்மாள், திருவல்லிக்கேணி.

அம்மையார் அவர்கள் உடல் தமிழகத்தை விட்டு மறைந்துபோனாலும் அவர்கள் உள்ளம் இங்கேயே சுற்றிக்கொண்டு இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தது தமிழ் மொழிக்கே பெருத்த நஷ்டம்.

நா. அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, சென்னை.

தங்கள் அண்ணலாரும் அண்ணியாரும் முறையே இறையடி நீழ லெய்தியமை யறிந்து மனங் கவன்றேன். யாரே இயற்கையை வென் றவர்.

மாணிக்கவாசகத் தம்பிரான், மதுரை.

இவர் பிரிவு மக்களுக்கும் உறவினருக்கு மட்டுமா இன்னலை விளைவித்துள்ளது. தமிழன்னை அணியை இழந்தனள்! மாணவர் செந்தமிழ் நூல்களை இழந்தனர்! பெண்ணுலகம் உயரிய பெட்பை இழந்தது! நினைக்குந்தோறும் மனம் பெரிதும் வருந்துகின்றது.

பண்டிதை. S. கிருஷ்ணவேணி, திருவல்லிக்கேணி.

திடீரென எதிர்பாராது ஏற்பட்ட தங்கள் அண்ணியாரின் மரணச் செய்தி எங்கட்கு அதிர்ச்சியை யுண்டாக்கிவிட்டது.

டாக்டர் E. ஆவுடைநாயகம் பிள்ளை, கும்பகோணம்.
(ஆங்கிலக் கடிதத்தின் மொழிபெயர்ப்பு).

கடிதங் கண்டு திடுக்குற்றேன். என்னதான் மனிதன் 'முடிவு' என்பதை நன்கு உணர்ந்தாலும நம்மைப்போலொத்தவர்களுக்குப் 'பிரிவு' என்பதைச் சிந்திக்காமலிருப்பது மிகவுங் கடினம்.

ம. கந்தசாமி, மணஞ்சேரி.

தமிழர் செய்த தவக்குறைவு இவர்கள் போன்ற கலைச் செல்வப் பெண்மணிகள் இளமையிலேயே துறக்க நேர்கின்றது! தமிழர் செய்த பாவம், தமிழ்த்தாய் செய்த பாவம்! அந்தோ! இவர்கள் இழப்பு

தமிழ் நாட்டு உயர்கலை இழப்பென்றே எண்ணுகின்றேன். பல கூறிப் பயனென்னை, கலை விளக்கம் அவிந்தது, தனித் தமிழுரை சாய்ந்தது! பெண்ணருங்கலம் பிரிந்தது! அறிவுக்கடல் வறண்டது! ஆ! ஆ! அம்மையார் நீலாம்பிகையார் பிரிந்தார்! தமிழணங்கின் சாயலன்றோ ஒழிந்தது!

சே. ர. இராமசாமி, பாகனேரி.

நம் ஊழின் கொடுமை யிருந்தவா றென்னே! கணவன் முன் பிரிந்திருக்க வேண்டியவர் கழக நிலை தெரிந்து செல்லக் காத்திருந்தனள் போலும்!

வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியார், திருச்சி.

தங்கள் அண்ணியும் தமிழ்த்தாயின் தவப்புதல்வியுமாகிய அருமை நீலாம்பிகை அம்மை அவர்கள் மண்ணுலக வாழ்வை விட்டு விண்கலந்த செய்தி அறிந்து ஆற்றெணுத் துயரடைகின்றோம்.

பண்டிதர், எஸ். எஸ். ஆனந்தம், சென்னை.

தமிழ் பெண்கட்கு ஓர் திலகமாகத் திகழ்ந்தார்கள் அன்னர். அகால மரணம் பெரிதும் நஷ்டமே!

ஸ்ரீ. போ. வேதாசலம், B.A., B.L., திருச்சி.

திரு. நீலாம்பிகை அம்மையார் மறைந்த செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டோம். தமிழை வளர்த்த அம்மையார் நம்மை விட்டுப் பிரிந்து இறைவனை நாடிச் சென்றனர்! அருமைக் குழந்தைகளை எப்படியும் ஆண்டவன் காப்பாற்றுவார். சிறிதும் மனம் தளரவேண்டாம்.

என். கே. வேலன், B.A., மயிலாப்பூர்.

தாங்கள் அனுப்பிய துயர் அறிவிப்புக் கடிதம் கண்டேன். தாங்க முடியாத துயரம் உண்டாகின்றது. என்ன சொல்வது! என்ன செய்வது! என்பன விளங்கவில்லை. அம்மையார் ஆன்மா அமைதி யுறுக!

வித்துவான் ம. இராரமாணிக்கம் பிள்ளை, M.O.L.L.T., சென்னை.

மனந் திடுக்கிட்டு ஆற்றெணுத் துயருற்றோம். கணவனை யிழந்த தங்கை, இன்னும் தனித்தமிழ்க்குத் தொண்டு செய்வாரென எண்ணிய எண்ணத்திற்கு இறைவன் திருவருள் மாறாய் விட்டது.

அ. கனகராயர், சென்னை.

தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்துவந்த அம்மையாரின் ஊனுடல் மறைந்தபோதிலும் புகழுடல் நிலைபெற்றிருக்கும்!

ராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியார், சென்னை.

தமையனாரவர்களைப் பிரிந்த துயரம் தீர்வதற்குள் இவ்வளவு விரைவில் கனம் அண்ணியாரும் பிரிந்த செய்தி அறிந்து பெருந்துயரம்

அடைந்தேன். குழந்தைகளின் நிலையை நினைத்தால் துயரம் இன்னும் மிகுதியாகிறது.

பரலி. சு. நெல்லையப்பர், சென்னை.

அம்மையார் மறைவு தங்கள் குடும்பத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் பேரிழப்பாகும்.

எஸ். கந்தசுவாமி, புலியக்குரிச்சி.

சைவமுந் தமிழுந் தழைத்தற்குத் திருவாட்டி நீலாம்பிகை அம்மை அவர்கள் செய்த அரும் பெருந் தொண்டுகள் மறக்கத்தக்கன வல்ல. விதியின் ஆற்றலை எவராலுங் கடக்கவியலாது. பிரிவு கொடிது! "வாழ்வாவது மாயம்" என்னும் உறுதி மொழியை அவர்கள் உறுதி செய்தார்கள். ஆற்ஞெணு மனக் கலக்கம். ஏங்குகின்றேன்! என் செய்வேன்!

E. சிங்காரவேலு முதலியார், மரக்காணம்.

இன வுணர்ச்சியும், கலை உணர்ச்சியும், இல்லாத தமிழகத்தைத் "தமிழகமே! நீ வேண்டாம்!" என்று உதறித் தள்ளி மறைந்த புலவர் மணிகள் வாழ்கின்ற உலகிற்குச் சென்றனரோ எனது அன்னையும்!

அன்னை நீலாம்பிகை நுண் உடல் பொதியம் பிறந்து எங்கும் தவழ்ந்து, புலவரைப் புரந்து வாழும் செல்வத் தமிழ்த்தாய் திருக் கமலத்தில் சாந்தி பெற அம்பலவாணனை வேண்டுகிறேன்.

சிறுவை. மோகனசுந்தரன், சென்னை.

திரு. நீலாம்பிகை அம்மையார் சிவபிரான் திருவடி நீழல் அடைந்த செய்தியை நேற்று அறிந்து ஆற்ஞெணுத் துயரம் அடைந்தேன். அம்மையாருடைய அரும் பண்புகளும், உயரிய கல்வித் திறனும் உலகம் அறிந்ததே. அம்மையார் தம் மனையில் எனக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு ஊண் அளித்து விருந்து ஓம்பின அன்பை என்றும் மறவேன். வாழ்க்கைத் துணைவர் பிரிந்த சிறிது காலத்தில் அம்மையாரும் அருமை மக்களை விட்டுப் பிரிந்தது மிகத் துயரம்! அந்தோ மிகத் துயரம்!!

ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், கோவை.

இந்தி எதிர்ப்பிலே தமது திறமையைத் தமிழகத்திற்குக் காட்டிய திருவாட்டி நீலாம்பிகையம்மையின் தொண்டைத் தமிழகம் என்றும் மறவாது. அம்மை இறந்த செய்தியைக் கேட்டுத் தமிழ் மகன் ஒவ்வொரு வரும் துடிக்காதிருக்க முடியாது. அத்துயரில் எங்கள் கழகம் பங்கு கொண்டு இரங்கற்கூட்டம் நடத்தியது.

இ. ரா. சண்முகன், செயலாளர், மாணவர் கழகம், போத்தனூர்.

அண்ணனின் பின் குழவிகள் பலரையும் தவிக்கவிட்டு அண்ணியை யும் அழைத்துக்கொண்டது மிகக் கொடுமை என்றுதான் கூறுவேன். சிறார்களை நினைக்குங்கால் என்னுள்ளம் புழுங்குகின்றது. வள்ளுவரோடு சேர்ந்து "கெடுக இவ்வுலகியற்றியான்!" எனச் சூளுரைக்கவும் மனம் வெதும்புகின்றது.

டாக்டர் முத்து. நமசிவாயம், சேலம்.

அன்பர்களின் ஆறுதலுரைகள்

தனித்தமிழ் இயக்கத்தின் தலைவி திருமதி. தி. ... மபாகை அம மையாரது மறைவு எங்கள் மனதைக் கலங்கச் செய்தது.........தமிழரின் தவக் குறையை எடுத்துக்காட்டுவது !

மீ. சு. இளமுருகனுர், பெரியகுளம்.

அம்மையாரின் பிரிவு கேட்டுத் தாங்கொணு ஆழ்ந்த வருத்தமடைகிருேம்.

பிறுங்கு சி. த. செல்லப்பன்.

அம்மையார் மறைவெய்தினுர்கள் என்ற செய்தியைக் கேட்டுச் சொல்லொணுத் துயரமடைகிருேம்.

கோலாலம்பூர் குமாரசாமி & ஆர். நீலகிரி.

அம்மையார் மக்களேயும், தாய் தந்தை சகோதரர்களேயும் விட்டுப் பிரிந்து இறந்ததை நினைக்க மனம் ஆரவில்லை.

போரூர் பரிமளம்.

தமிழுக்கும் சைவத்திற்கும் தன் உடல் பொருள் ஆவியெல்லாம் ஈந்து உழைத்து வந்த திருவாட்டி நீலாம்பிகையம்மையார் இயற்கை யெய்தியது கேட்டு மிகவும் வருந்துகின்றேன்.

கோபி, பொன்னு சேதுராமன்.

அம்மையார் நம் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினுர்கள். எவரிடத்தும் அன்பும் தயையும் ஆர்வமும் பூண் டொழுகினுர்கள் ; தமிழும் சைவமும் வாழ்க்கை நிலையமாய்க் கருதியிருந் தார்கள்.

தென்காசி. வித்துவான் உ. குமாரசாமி.

தங்கள் அண்ணியார் தேக வியோகமானதைக் கேட்டு மிகவும் வருந்துகிறேன். தங்களுக்கு ஏற்பட்டுள்ள கடமைகளும் பொறுப்புக் களும் அளவு கடந்தவை.

சென்னை R. விசுவநாதையர்,

தங்களுடைய அண்ணியாரவர்கள் பல துறைகளில் தமிழ் நாட்டிற்கு முக்கியமாக அதன் பெண்ணுலகத்திற்கு வழிகாட்டியாக இருந்தார்கள். அவர்களுடைய மரணத்தினுல் தமிழ் நாட்டிற்கே பெரு நட்டம்.

தியாகராய நகர், சே. நே. நாயகம்.

நோய் நிலை அறியத்தான் ஒன்று எழுதினேன். துயர்நிலைத்தான் கிடைக்கப்பெற்றேன். அதுபற்றித் தமிழ்ப் பொழிலில் எழுதியிருக்கும் வேண்டுகோள் பார்த்திருப்பீர்கள். அத்தகைய வேண்டுகோள் தமிழ் நாட்டில் பரவுதல் வேண்டும். தங்கள் ஊக்க எழுச்சியே குடும்பத்தைப் புரக்கவல்லது. துயராது எழுக.

கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை.

தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் அல்லும் பகலும் உழைத்து அதனாலேயே உடல் நலிந்து உயிர் நீத்த உயரிய இரு தமிழ்த் தொண்டர்களின் குழந்தைகளைப் பாதுகாக்கத் தமிழ்நாடு முன் வரின் நன்றியுள்ள செயலாகும். என் இக் குடும்பத்தைக் காக்க "நீலாம்பிகையார் நிதி" என்று ஒன்று துவக்கக்கூடாது !

R. பாலகிருஷ்ணன் (இளங்கண்ணன்), பி.ஏ., எல்.டி.

தோன்றிய எவரும் மறைவது திண்ணமென்னும் இயல்புடைய இவ்வுலகில் 'மாண்டார் மீள்வதேது' என்று மனந் தேர்தலே மக்கள் திறன் என்று மனச்சாந்தி யடைவோமாக !

திருச்சி M. வேங்கடாசலம் பிள்ளை, பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.

உயிரினுஞ் சிறந்த மக்களைப் பிரிந்து, கணவனுயிரைக் காண விரைந்த கற்புக்கரசி நீலாம்பிகையின் கலைத்திறனும், தமிழ் சைவப் பற்றும் உழைப்பார்வமும் என்றும் மறக்கமுடியாதன.

சேலம் சுகவனம் சிவப்பிரகாசனார்.

அம்மையார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழன்னைக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்வார்கள் என்று நம்பியிருந்தேன். இறைவன் அந் நம்பிக்கையில் மண்ணைப் போட்டுவிட்டான்.

வேதப்பட்டி பழ. தமரப்ப செட்டியார்.

அந்தோ ! தமிழுக்கே உழைத்த குடும்பத்திற்கு இதுவோ முடிவு ! இவ்வாறு துன்பம் நேருதல் தகுமோ ? இதுவும் இறைவன் திருவுள்ளமாமோ ?

இராவ்சாஹிப் K. கோதண்டபாணி பிள்ளை.

பின்கண்ட அன்பர்களும் இரங்கற் கடிதங்கள் அனுப்பியிருந்தனர்:

திருவாளர்கள் :—திவான்பகதூர் பி. ஆவுடையப்ப பிள்ளை, வண்ணார்பேட்டை ; பண்டித. அ. கந்தசாமி பிள்ளை, பேரூர் ; கே. கே. சீனிவாசன், சென்னை ; வி. இராஜகோபால் முதலியார், அட்வகேட், சென்னை ; நா. முத். காசிநாதன் செட்டியார், தேவகோட்டை ; தொ. வெ. செங்கல்வராயன், பெங்களூர் ; எம். இராசகோபாலன், சென்னை ; எம். பி. நாகராசன், சென்னை ; ஆ. வெங்கடாசலப்பெருமாள், சென்னை ; ராம. கு. இராமசாமி, திட்டை ; முத்தையா, களக்காடு ; ச. அ. சிவசிதம்பரம், பண்ருட்டி ; எஸ். எஸ். பெருமாள், சென்னை ; அ. சாமிநாத முதலியார், சங்கரன் கோவில் ; டாக்டர் வி. சுந்தரமூர்த்தி, கோடம்பாக்கம் ; வித்துவான் மீ. பொன். இராமநாதன், சென்னை ; ர. மோகனம், செல்வி சிவரத்தினம் ; அருவாங்காடு வே. நடராஜன், BSc. ; தேவகோட்டை வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் ; U. அலர்மேல்மங்கைத் தாயாரம்மாள், கோமளேஸ்வரன்பேட்டை ; வேலூர் மார்க்கபந்து (அறக்குழி.)

அம்மையாரின் மறைவு குறித்து நினைவுக்கூட்டட இரங்கல் தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள் :—

தமிழர் கழகம், இஞ்சினீயரிங் கல்லூரி, கிண்டி.
முருகன் செந்தமிழ்க் கழகம், மயிலம்.
திருவள்ளுவர் கழகம், தென்காசி.
மாணவர் இளங்கோவடிகள் தமிழ்க் கழகம், வேலூர் (சேலம்).
கம்பர் செந்தமிழ்ச் சங்கம், குளித்தலை.
அறிவு வளர்ச்சிக் கழகம், புதுக்கோட்டை.
சித்தாந்த பிரகாச சபை, சென்னை.
மணி அரசு மன்றம் ,,
வேளாளர் சங்கம் ,,
தமிழ் வித்துவான் சங்கம் ,,
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், சென்னை.
மாணவர் மன்றம், சென்னை.
தமிழர் நல்வாழ்க்கைக் கழகம், சென்னை.
தமிழ் மாதர் கழகம், சென்னை.
ஞானியார் மன்றம் ,,
நக்கீரர் கழகம் ,,
மாணவர் கழகம், பொத்தனூர், (சேலம்).
திருவள்ளுவர் கழகம், லாலுகுடி.
பாகம் பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி.
மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளி மாணவர் கழகம், திருநெல்வேலி.
சென்னைக் கல்விச்சங்கம், சென்னை.

திருவாட்டி தி. நீலாம்பிகையம்மையார் அவர்கள் எழுதிய நூல்கள்

		ரூ.	அ.
1.	**மேனாட்டுப் பெண்மணிகள் :—** வாழ்க்கைத் துறையில் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் தூண்டுகோலாயிருப்பது.	1	0
2.	**பட்டினத்தார் பாராட்டிய மூவர் :—** செயற்கருஞ் செயல்கள் செய்த நாயன்மார் மூவரின் வரலாற்றை இனிமை ததும்ப எடுத்தியம்புவது	1	0
3.	**அருஞ்செயன் மூவர் :—** சிவத்தொண்டு செய்த திருவினர் வரலாற்றைச் சிறுவரும் படித்து மகிழத்தக்க முறையில் அமைந்துள்ள எளிய இனிய தமிழ் நூல்	0	6
4.	**முப்பெண்மணிகள் வரலாறு :—** தமிழ் நாட்டுப் பெண்மணிகள் எத்தகைய தமிழ் மாதரசிகளைப் பின்பற்ற வேண்டும்? இக் கேள்விக்கு இந் நூல் சிறந்த விடையாகும்	1	0

ரூ. அ.

5. கண்......பா வரலாறும், திருக்காளத்திக் காட்சியும் :—
கண்ணப்பர் வரலாற்றை இவ்வளவு அழகாக உயர்ந்த கருத்துக்களோடு வெளியிடப்பெற்றுள்ள நூல் இஃதன்றி வேறில்லை 0 12

6. ஜோன் வரலாறு—(Life of Joan of Arc) 0 10

7. எலிசபெத் பிரை பெருமாட்டி (Elizabeth Fry) 1 0

8. பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) 0 8
இம் மூன்று நூல்களும் நாட்டுக்குப் பெருந்தொண்டு செய்த மேனாட்டுப் பெண்மணிகளின் வரலாற்றை விளக்கமாக அறிவிக்கும் சிறந்த நூல்கள். இம் மூவர் வரலாறும் தமிழ் மக்களுக்குப் புது விருந்தாகும்.

9. தமிழ் நாடும், தமிழ் மொழியும் முன்னேறுவ தெப்படி ?
ஒவ்வோர் இல்லத்திலும் கட்டாயம் இருக்கவேண்டிய சிறு நூல் 0 3

10. வடசொல் தமிழ் அகர வரிசை—(Sanskrit Tamil Dictionary) :—
இதன்கண் தமிழ் மொழியில் வந்து கலந்துள்ள 6000-க்கு மேற்பட்ட வடசொற்களுக்கு நேரான தனித் தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1 12

11. தனித் தமிழ்க் கட்டுரைகள் :—
தமிழ் தானே தனித் தியங்கவல்ல தென்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது இந்நூல். இதில் உயரிய புதுக் கருத்துக்கள் அடங்கியுள்ளன 1 0

12. நீலாம்பிகை அம்மையார் வரலாறு :—
இதன்கண் அம்மையார் வரலாறும் அவர்களின் கொள்கைகளும், அவர்கள் இயற்றிய நூற்களில் உள்ள அரிய கருத்துக்களும் அடங்கியுள்ளன 1 0

கிடைக்குமிடம் :—

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

PRINTED AT SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS (16-1-46)
for South India Saiva Siddhanta Works—Q. H. Ms. 95 B, C. 500.